உ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௮	திருவள்ளுவர் ஆண்டு ஆனி ௧௯௮௫, ஜூலை, 1954	பரல் ௧௧

தூ. சு. கந்தசாமி முதலியார் பிரிவு

பிறப்பு

இராமநாதபுர மாவட்டத்தில் "நெடுநுகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவும் ஒப்பநாடிக், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது, பல்பண்டம் பகர்ந்து வீசும்" பண்டைத் தமிழக மரபினராம் வணிகர்குழுவுக்குச் சாத்து என்னும் பெயர் வழங்கிவந்தது. அப்பெயரானே வழங்கிவரும் விழுமிய சைவ வேளாண்குலத்தில் பல்வளமிக்க சாத்தூரின் அண்மையிலுள்ளதோர் வளநாட்டில் பலவராயர்குடியில் திருவாளர் சுப்பிரமணிய முதலியாரவர்களும் அவர்தம் கற்பின் மிக்க பொற்புறு மனைவியார் சுப்பம்மை அம்மையாரவர்களும் செய்த பெருந்தவப் பேற்றால் நந்தன ஆண்டு சித்திரைத்திங்கள் 14-4-1892 சோதி நன்னாளில், தமிழும் சித்தாந்தமும் ஓங்கச்செய் சிறப்பு வாய்ந்த ஒரு செம்மலார் தோன்றினர். அவர்தம் திருப்பெயர் கந்தசாமியார் என்ப.

இவர்தம் பிற்கால வளமையெலாம் இளமைக்கண் தோன்றலாயின. உருவும், திருவும், ஓங்கிய முகமும், அகன்றநெற்றியும், கூர்ந்தமூக்கும், பரந்தவிழியும், விரிந்தமார்பும், நீண்டகையும், பிறவும் இவர்தம் மாண்டகுணத்தின் மாண்படையாளங்களாயின. திருவருளால் செம்மையாக வளர்க்கப் பெற்றார்கள். நன்முழுத்தத்து நல்லாசான்பால் தமிழ் ஆங்கிலங் கற்றுச் சிறந்தனர். பின்னர் மதுரையம்பதியில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மேற்படிப்புப் பயின்று மிளிர்ந்தனர். ஆங்குத் தமிழாசிரியர் நல்லகுற்றாலலிங்கம் பிள்ளையவர்கள்பால் தமிழ்

பயின்ற ஆர்வம் இவர்கள்தம் பிற்காலத் தமிழ்ப்புலமையின் பெருக்க நிலையினைக் குறிக்கும் குறிப்பாயிருந்தது.

கலை

பின் திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. கல்லூரியில் கலைபயில் கல்வி பயின்றனர். ஆங்குத் தமிழ்த் தவமகனாராம் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தனர். அவர்கள்பால் தமிழ்பயின்றார் தமிழ்ப்புலவராய்த் திகழ்வது இயல்பே. அம்முறையில் நம் முதலியாரவர்கள் 1917-இல் கலை இளமையாம் பி. ஏ. பட்டம் பெற்றுக் காண்போர்க்கும் கேட்போர்க்கும் கனிவுற விளங்கினர். இயற்கையே இவர் தம் உள்ளத்தெழுந்த தாய்மொழியாம் தமிழ்ப்பயிர், நல்லாசிரியர்களாம் இருபெரும் கொண்டல்களால் வீறுற்றெழுந்து கூறுதற்கரிய நற்பயன் தந்தது. அதன்பயனாகச் சிவகாசி உயர்நிலைப் பள்ளியில் 1917-இல் தமிழாசிரியராகவும் சிலகாலம் பணி புரிந்தனர்.

1919-இல் சட்டக்கலையில் தேறி மன்றுடியாம் வழக்குரைஞராய்ச் சிறந்து யாவரும் புகழப் பல்லாண்டு பணிபுரிந்து ஊதியமும் புகழும் ஒருங்கு எய்திச் சான்றோராய் வாழ்ந்தனர். "கல்விக்கு மூப்பு இளமையில்" என்னும் பண்டையோர் வாய்மொழியை வாய்மொழியாகக் கொண்டு கலைமுதுவர் என்னும் தமிழ் எம். ஏ. பட்டம் தம் முதுமையில் தாங்கினர்.

தொண்டு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சிக் குழுவின் பார்வையாளராய்ப் பலகால் தொண்டாற்றினர். மெய்கண்டான் தனித் தமிழ் நூலாம் "சிவஞானபோத"த்தின் கண்ணும், செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளின் கண்ணும் மிக்க ஆய்வு முறையில் பயின்ற புலமைவல்லார். ஆங்கிலப் பேராசிரியர்கள் ஆக்கிய பெருநூல்களுடன் இவற்றை ஒப்புநோக்கியும் உண்மை கண்டும் உவந்தும் உலையாமுயற்சியுடன் நிலையாகக் கற்றுவல்ல நிறைபேரறிஞர். தாம்கண்ட மெய்ம்மையினை உலகோர் உளங்கொள எடுத்துரைக்கும் ஒண்மையர். மேனாட்டாரும் வியக்கும் திருக்குறளின் விழுப்பத்தை ஆங்கில நூற்களுடன் ஒப்பிட்டு ஆங்கில ஆசிரியர்கள் கருத்தினும் திருவள்ளுவ நாயனார் கருத்து சீர்பெற்று விளங்குதலை, யாவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் எடுத்தியம்பும் பாவன்மை மிக்க நாவன்மையர். கழகப் பதிப்புத் திருக்குறள் ஆராய்ச்சி முன்னுரையில் நாயனார் நன்கெடுத்து நவிலும் திறனெலாம் விளக்கிக் கணக்குமுறை மேற்கோளும் காட்டி வலியுறுத்தும் மாண்பு இவர்தம் நுண்ணுணர்வுக்கோர் எடுத்துக்காட்டாகும்.

விழு

திருக்குறள் எங்ஙனம் உலகப் பொதுநூலோ அதுபோல் மெய்கண்டான் தமிழாகிய சிவஞானபோதமும உலகப் பொது நூலேயாம. திருக்குறள அறமபொருள் இனபம் மூன்றினையும் திறமபடக் கூறுகினறது. சிவஞானபோதம இம்மூன்றினையும் பெற்றுத் துன்பகனறு இன்பமாய் எனறும வாழும நனறி உயிா, நற்றுணையாமஇறை, விட்டுநீங்குமதளை என்னும் முப் பொருள உணமையினை வழியளவையான வறபுறுததி உல கெலாம ஒபபும வண்ணம உணாததுகினறது. இமமெயயுணர்வு நூல தமிழகப பணபுசோ தனிப்பெருஙகலையாகும. இம்மெய்க் கலை மேனாட்டு மெய்பபுலவா (தததுவ ஆசிரியா) நனகுகற்கும் வாயிலை நாம உண்டாககிவைப்பின் உலகமும உண்மையோாநது தெளியும். நூலும் உலக அரங்கில முதன்மையுற்றுத திகழும்.

இவவுண்மை எலாம திருவுளங்கொண்ட திருப்பனந்தாள் திருமடததுத் திருமுறைத தலைவர் அவர்கள் திருக்காசியின்கண் விளங்கும காசிப பலகலைக் கழகததுச் சிததாநத வகுபபு ஒனறு நிலையாகப போதிககத் தம செலவிலேயே ஓா ஆசிரியரைத் தமிழகத்தினினறும் கொண்டு போயமர்ததி வேண்டும வாய்பபு களும செயதருளிப் போதிபபிக்கும பணியைப புரிவித் துளளாாகள். அவவாசிரியரும் எம். ஏ. பட்டம்பெற்ற ஏற்றத் தினரேயாவர் ஆணடுதோறும தமிழகததினின்றும செந் தமிழும், ஆங்கிலமும் சிததாந்தமும் ஒருங்கு கற்றுப் புலமை வாய்நது நுண்ணுணர்வினராய், நூலுணாந்த மேலோராய், ஆன் றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய் வாழும் பேராசிரியன் மாரை ஆங்குச் செலுத்திச சிவஞானபோத உண்மைகளைச் சில பல தலைபபுககளாக ஆங்கிலததில் தொடர்ந்து விரிவுரையாற்று விக்கின்றாகள் பின அககட்டுரையினை நூல் வடிவாக்கி வெளி யிடவும் அமைததுள்ளார்கள். இத திருததொண்டுகளெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழக வாயிலாக நிகழ்த்துவிக்கின்றார்கள். நம் முதலியார் அவர்களும ஒருமுறை சென்று ஆங்குப பணி புரிந்து வேண்டுவபெறறு வீறற்றுள்ளாாகள். காசியில் ஆற்றிய விரிவுரை இன்னும் வெளிவராமல் இருக்கிறது. அதனை அன்போடு அவர்தம் குடும்பததினா வெளியிடுவார்களெனை நம்புகின்றோம. தமிழகமும் அச்சிறநத வெளியீட்டை ஆர்வ முடன் எதிர்பார்க்கின்றது.

பொதுப்பணி

அரசியலில் 'நீதிக்கட்சியில்' உறுப்பினராக இருந்தாாகள். கூட்டுறவுப் பண்டசாலை, அர்பன் பாங்கு, மார்ககட்டிங்

சொற்பொழிவுகளை நிறுவி அதன் வளர்ச்சியின் பொருட்டு ஒல்லும் வகை ஓவாதுழைத்தனர். ஏ. வி. உயர்நிலைப் பள்ளியில் கொண்டு நடத்தும் பொறுப்பினராயப் பணியாற்றியுள்ளார்கள். தேவஸ்தானக் குழுவின் தலைவராக இருந்து செம்மையுறச் செயல் புரிந்தனர். சாத்தூர் நகராட்சியில் இருமுறை தலைவராக இருந்து இயன்றன சிறப்புறச் செய்துள்ளார்கள்.

சாத்தூரில் 'தமிழ்ச் சங்கம்' என்னும் பெயரால் ஒரு கழகம் நிறுவி அதன் உறுப்பினராகவும், செயலாளராகவும், தலைவராகவும் அமர்ந்து பல்லாண்டுகள் பயனுறத் தமிழ்ப்பணி புரிந்தனர். 1948-இல் 'சைவ சித்தாந்த மகா சமாச'த்தின் தலைவராக இருந்து செந்தமிழுக்கும், சிவநெறிக்கும் சீர்பெறப் பணியாற்றியுள்ளார்கள்.

விருதுநகர் செய்தவத்தால் தோன்றிய சங்கங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சென்று, திருக்குறளும், சிவஞான போதமும் "கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்கும்" மொழியவாய்ச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்கள். திருக்குறளில் தம் மும்மொழிப் புலமையால் மிக நுண்ணிய கருத்துக்களெல்லாம் ஆய்வு முறையில் தக்கவாறு தேர்ந்து தெளிந்துள்ளார்கள். அத்தெளிவின் பிழிவெலாம் செவ்விய முறையில் நூல் வடிவாய் வெளிவர வேண்டுமெனும் பெரு நோக்கமும் பேரூக்கமும் கொண்டிருந்தார்கள். இறுதிக்காலத்தும் அதனை நிறைவேற்றவேண்டும் எனும் ஆர்வினையில் மிக்கிருந்தார்கள். நோயின் காரணமாக மருத்துவர்கள் இணக்கந்தர மறுத்துவிட்டனர். தமிழ்நாட்டின் தவக் குறைவால் அக்கருத்துக்கள் வெளிவர வாய்ப்பின்றிக் கழிந்தமை பெரிதும் வருந்தத் தக்கதே. சிறப்பாகத் திருக்குறளில் மன்பேராற்றல் வாய்ந்த மதிவாணர்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து இயக்குநர் குழுவிலும் உறுப்பினராகவிருந்து பணிசெய்துள்ளார்கள். இதழாசிரியர் குழுவிலும் உறுப்பினராக இருந்து தொண்டாற்றியுள்ளார்கள்.

சிறப்புப்பணி

கழக அறநிலையங்களுள் ஒன்றாகிய 'தென்னிந்திய சைவ சித்தாந்த சங்க'ச் சார்பில் 27-4-52 முதல் 20-5-52 வரை இருபத்தொரு நாள்காறும் திருநெல்வேலிச் சந்திப்பு சிந்துபூந்துறைத் தருமபுரத் திருமடத்து, சிவஞான போதச் சிற்றுரைச் சித்தாந்த வகுப்புச் சிறப்புற நடந்தது. அதன் பேராசிரியராய்த் திகழ்ந்து தம் மும்மொழிப்

புலமையும் தோன்ற பி ஏ, எம் ஏ., ஆங்கிலப் பட்டமும், தமிழ்ப் புலமைப் பட்டமும் பெற்று நாவன்மை, பாவன்மை, நூலியற்றல், போதித்தல், நுண்ணுணர்வு முதலிய பிறநலங்களும வாய்க்கப்பெற்ற மாணவர் அறுபதின்மாக்கு அவா உளங்கொளப் போதித்துச் சங்கத்தாராலும, திருப்பனந் தாள், தருமபுரம, குன்றக்குடி முதலிய திருமடங்களாலும், திருமிகு செல்வாகளாலும், மாணவர்களாலும, பொற்கிழி, பொனனுடை, பொன்னணி, வாழ்ததா முதலியன பெற்று ஒண்ணிதிச செல்வர்களாய் உயர்நது பொலிநதுள்ளார்கள். அக் காலத்தே அவாகளுககு அறுபதாண்டு நிறைவுவிழாவாகிய மணிவிழாவும நிகழ்நதது.

இவர்கள், தமிழகத்துச் சிறப்பாகக காணப்படும் 'தூத்துக் குடி சைவ சிததாந்த சபை'க்குப் பலமுறை தலைமை பூண்டுள் ளார்கள் தமிழக முற்றுமுள்ள அவைகளிலெலலாம தலைமை பூணல விரிவுரையாற்றல் முதலிய தொண்டுகள் செய்தும் செநதமிழும் சிததாந்தமும சிறக்க வளர்ததுள்ளாாகள். கலததின் வழியாகக கடலகடந்து இலஙகை யாழ்ப்பாணங்கள் சென்று இனிய விரிவுரை ஆற்றித் தாய்மொழியாம தமிழ்பபணி ஆற்றியுள்ளாாகள்.

பேரா இயற்கை

சின்னாட்களாக நீர்க்கோவைப் பெருக்கமாம பாண்டு நோயால் வருநதினாாகள். ஆங்கிலத்திலும தமிழிலும் சிறந்த மருததுவர்கள - மிககதிறலோர் தக்கவாறு மருநது கொடுத்து வநதார்கள. சிறிது குணமாவதும், மீண்டு வருவதுமாக இருந்து வந்தது இந்நோய்த் துனபம அவர்கள் உடலை வருத்திற்றே யன்றி உள்ளத்தை வருத்தவில்லை. இதுவே இருவினை ஒப்பும், இறைநினைவு மாறாமையும என்னும் சிறந்த பண்பாகும். நோய் நிலைக்காலத்தும தாம செய்யவேண்டிய தமிழ்த்தொண்டும், சிவததொண்டும், ஊர்ப பொதுத்தொண்டும் ஓவாது உஞற்றி வநதாாகள். உற்றார், உறவினா, நணபர், மருத்துவர் முதலியோர் வேண்டாவென வற்புறுத்தியும் ஏற்றுக்கொளளாது தொண்டு புரிந்தே வநதார்கள. இதுவன்றோ செயற்கருஞ்செயல்.

இந்நிலையில் 27-6-54 ஞாயிற்றுக்கிழமை பகல 12-30 மணிககு இறையடி நீழல் எய்தினார்கள. இவர்தம் இழப்பு எஞ்ஞான்றும ஈடுசெய்ய ஒண்ணாப் பேரிழப்பேயாம். அவர்தம் கற்பிற் சிறந்த மனைவியார், அன்பின் மிக்க மக்கள் இவாகட்கு எங்கள பரிவும் ஆறுதலும உரியவாகுக. அவர்கள் ஆருயிர் இறையடி இன்பில் திளைப்பதாக.

ஓம்

திருச்சிற்றம்பலம்

நால்வர் செல்லாக் கோவில்கள்?

[சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை]

தமிழ்

"மாதவஞ் செய் தென்றிசை வாழ்ந்திடத்" திருவருளால் தோன்றிய தீதில் சிவனெறித் தலைவர் நால்வராவர். ஒரு திசை உயர்வு எய்துவது அத்திசைக்கண் வாழும் நன்மக்களாலேயாம். ஒருநாட்டு மக்கள் நன்மக்களாவது அந்நாட்டின்கண் வாழும் "ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரா"லேயாம். சான்றோர் மக்களைச் செம்மையுடையவராக்குதற்கு ஏற்ற கருவி ஆற்றல் வாய்ந்த மொழியேயாம். மொழியே நாகரிகத்தின் விழி. தென் திசை "ஞாலம் அளந்த மேன்மை"ச் செந்தமிழால் சிறப்புற்றது என்க. செந்தமிழே உலகத்து முந்திய மொழி. முந்தியது மட்டுமல்ல, உலக மொழிகட்கெல்லாம் தாய் மொழி. பண்பட்ட மொழி, பயனார் மொழி, இன்புநிறை மொழி; எழில்மிகு மொழி; மென்மொழி, மேலோர் கைக்கொள் நன்மொழி; தெய்வ இன்மொழி, கயிலாயத்தும் பயிலும் தொன்மொழி.

இத்தகைய மொழி யாவரும் எளிமையாகப் பேசவும், எழுதவும், கருதவும், கைக்கொண்டொழுகவும் வேண்டிய பல நலங்களோடு இயல்பாகவே அமைந்தது. இயல்பாக அமைந்தது என்னும் உண்மையை விரிப்பின் திருவருளால் அமைந்தது என்றாகும். அதனாலேயே தெய்வத் தமிழ்மொழி பல்லாயிர ஆண்டுகள் ஆகியும் தெய்வத்திளநலங் குன்றாது, வேற்று மொழிக் கலப்பாம் மாயத்தால் விழுங்கப்பட்டுத் தன்னியல்பிழவாது, தனித்துக் கன்னித் தமிழாய் இன்றும் விளங்குகின்றது. அவ்விளக்கம் உலகியல்வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் ஒப்பத் திகழ்கின்றது. தமிழ்மொழித் தொடர்பால் சில ஆயிர ஆண்டுகளுக்குமுன் தோன்றிச் சிறந்த வடமொழி, இலத்தின் முதலிய மொழிகள் இன்று உலக வழக்கற்று நூல் வழக்கில் மட்டும் நுண்மையாய்க் காணப்படுகின்றன. இவ்வுண்மையெலாம் புலப்படவே, "மாதவஞ்செய் தென்றிசை வாழ்ந்திட" என்பதன் பின் "தீதிலாத்திருத் தொண்டத் தொகைதரப் போதுவார்" எனும் பொன்மொழியும் போந்தது என்க. 'தீதிலா'-(மக்களைத் தீமையினின்றும் விலக்கி நன்மையின்கண் உய்த்துச் சிவனடிக்கு ஆளாக்கும் வாய்மையினால் மக்களது மலப்பிணியாகிய) தீமையை

இல்லாமல் செய்கின்ற என்பது பொருள். இப்பொருள் அமைந்த நூல திருமுறைகள என்பது தோன்றத 'திருத் தொண்டத் தொகை' என மொழிந்தருளினர்.

மறை

இத திருத்தொண்டர் திருவரலாறு ஒன்றே தெய்வத் தமிழின பொதுமறையாம திருக்குறளுக்கு முழுமையும் வாய்நத இலக்கிய நூலென்க தமிழின் பொதுமறை தேவர் குறள் தமிழின சிறப்புமறை மூவா தமிழ் மறைமுடிபு திருவாசகம திருக்கோவையார் என்னும முனிவா மொழி. தமிழாகமம திருமூலர் சொல் திருவள்ளுவா, மூவர், வாதவூர் முனிவர், திருமூலர் ஆகிய நாற்பாலவரும செந் நெறித தலைவாகள அவாகள திருமொழி அனைத்தும் ஒரு மொழியே ஒப்பில அருளமொழியே. நாட்டிலும, வீட்டிலும, ஏட்டிலும, திருக்கோவில் மாட்டும ஒப்பத்திகழும செப்பரும் செமமொழி. இமமொழியின் மெய்மமை உணராது அயன் மொழி மயக்கால சில்லோர் அந்நாளும மருணடனா அவாகள் மயக்கொழிகக நாலவர் முதலிய பெருமக்கள் திருவருட்செயல் பலவும புரிநதனா. மறுபுலச சொறகளுக்கு இம மாதவமும், இம மாப்பேராற்றலும் இல்லையெனச் சானறோா பலரும அறை கூவி மொழிநதனர். ஆளுடைய பிள்ளையாராம ஞானசம்பநதப் பெருமானார் அஞ்செழுத்தாணமை வலியுறுததித தமிழ் மநதிரங்களே சாலச் சிறநதன எனவும், அம்மநதிரஙகளில் தலையாயதும தாய்மையானதும திருஐநதெழுததே எனவும் திருவாய மலாநதருளினா திருமுறைகள அனைததும திருவருண் மநதிரங்களே. சிவவேளவியே தவவேள்வி என்றருளினர். மறநதும் பிறமொழிக்கு வாயதிறந்திலர். சிறந்த திருக் கோவில்களிலும் அமிழ்தினும இனிய தம தமிழமொழிககு இடமில்லையாலை அஙகுப போகவும மனம ஒருப்பட்டிலர். போகாதொழியினும ஆஙகாங்குள்ள சிவபெருமானைத தனித் தமிழாற்பாடும தம கடப்பாடு வழுவாது தமிழ் வழஙகும் பெருந்தவ நாடாம திருக்காளத்தியின்றே தமிழ்மறையாம் திருமுறை பாடியருளினா இம்மெய்மமையினைச் சேக்கிழார் அடிகள திறமபெறத் திருவாய் மலாநதருளினர். அத் திருப் பாட்டு வருமாறு:

"அஙகண்வட திசைமேலும் குடகின் மேலும்
அருந்தமிழின் வழககஙகு நிகழா தாகத
திஙகள்புனை முடியாாதம் தானம் தோறும்
சென்றுதமிழ் இசைபாடும் செயகை போல

மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச
செங்கமல மலர்வாவித் திருக்கேதாரம்
தொழுதுதிருப் பதிகஇசை திருந்தப் பாடி."

"கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோகரணம் பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றின்மிசை வருவாரிந் திரன்தன் நீல
பருப்பதமும் பாடிமகிழ்ந் திறைவர் தானம்
போற்றியசொல் மலர்மாலை பிறவும் பாடிப்
புகலியர்தம் பெருந்தகையார் புனித மாகும்
நீற்றினணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிதுமகிழ்ந் தப்பதியில் நிலவு கின்றார்."

—கஉ. திருஞானசம்பந்தர்-க0உ௬-௭.

இவற்றின் பொழிப்பு வருமாறு:

[திருஞானசம்பந்தப் பெருமானார் திருக்காளத்தி சென்று சிவபெருமானைத் தாளிணைக்கீழ்த் தொழுதுவீழ்ந்து வணங்கினர். வணங்கினவர் குலவேடர் பெருமானாகிய கண்ணப்ப நாயனாரைக் கும்பிட்ட பயன் காண்பார் போல் அவர்தம் திருவடியிலும் வீழ்ந்து வணங்கினர் சின்னாள் அங்கு உறைந்தனர்]

அக்காலத்துத் திருக்காளத்திக்கு வடபாலும் மேல்பாலும் தமிழ்வழங்காது தெலுங்கு இந்துக்தானி முதலிய பிறமொழிகள் வழங்கி வருவவாயின தாம் பாடும் திருமாமறைத் திருப்பாட்டுக்கள் இறைவன் திருச்செவி சாத்துதலேயன்றி வழிபாட்டிற்கு வரும் பெருந்திரள் மெய்யடியார்களாகிய மாந்தர்குழு கேட்டு, அவற்றை ஓதி உணர்ந்து உரைத்து, உளமுறைந்து ஒன்றி உய்யவேண்டும் என்னும் திருவருள் திருக்குறிப்பாம் திருவுள்ளமும் உடையவர். அதனால் அங்கு இருந்தருளியபடியே திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம், திருநீலப் பருப்பதம் முதலிய திருவூர்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பாடியருளினார். அங்ஙனம் பாடியருள்வது அவர்தம் பெருங்கடமையாம் என்க.

வழிபாடு

இவற்றான் நாம் அறியக் கிடப்பது அவ்வந் நாட்டு மொழிகளாலேயே வீட்டு வழிபாடு, கூட்டு வழிபாடு, திருக்கோவில் வழிபாடு, திருமண முதலியவற்றின் கரணங்களாகிய சடங்குகள் அனைத்தும் நடாத்துதல் வேண்டும் என்பதே. அங்ஙனமிருப்பவும் இந்நாளிலும் வழிபாடுகளிலும், திருக்கோவில்களிலும், சடங்குகளிலும் தாய்மொழியாம்-உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழிக்கு இடனின்றிப் பிறமொழிக்கு இடனுய்ப்ப பெரும்பாலும் சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும்

ஒரு சிறிதும் புரியாதபடி செயல் நிகழ்கின்றது. அதனால் கருத்து அழுந்துவதற்கு வாய்ப்பின்றி வெறும் ஆரவார மாத்திரமாகவே பயனின்றிக் கழிந்து பாழாகின்றது.

மந்திரம்

அம்மட்டோ, செந்தமிழன்பும், சிவனெறிப் பற்றும், உடைய மெய்யுணர்வினா சடங்குகளும் வழிபாடுகளும தொன்மைபோல் தாய்மொழியிலேயே செய்யவேண்டும எனக் கைக்கொண்டு செய்து வருகின்றனா அதனைக் கண்ணுறும சிலர் உண்மை உணராது தொனமைக்கு மாறாக இடையே புகுந்த வேற்றுமொழி மயக்கால் அம்மொழிச் சொற்களே மநதிரம; ஏனைய மந்திரம் ஆகா என வம்புரைக்கின்றனர் திருமுறைகள் சித்தாநத நூல்கள் முதலிய செநதமிழ் நூல்களே கைகண்ட மநதிரம் என நம் முன்னோாகள உரைததருளிய வாய்மைச் செமமொழியை இவர்கள உணர்வாராயின் இங்ஙனம் மருண்டு கூறார். இவர்கள் தெருண்டு கைக்கொள்ளுமாறு அவவுண்மையினை வரைகின்றாம். அவை வருமாறு :

“ அருமறையைச சிச்சிலிபண டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுஎன்றும உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே ஓடும்
என்புகரும் உயிர்கொடுக்கும இடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்குஙகல மிதககப் பணணும
கராமதலை கரையிலுறக் காற்றுங காணே.”
—திருமுறை கணட புராணம், கஎ.

அருமறை - வடமொழி மறை, இம்மறை பல கடவுளர் உண்மையும் வழிபாடும பயனும் கூறுவது திருமுறை ஒரு கடவுள் வழிபாடும், உண்மையும, மாறுப பயனும் கூறுவது. திருமுறை ஏழாதலின் அதன்கண் திருவருட் செயல் பலவற்றுள்ளும ஏழ்பெரும் செயல்களே ஈண்டு ஏத்திப் புகழப்பெற்றன. அவை: ஆளுடைய பிள்ளையார், க திருக்கூடலாம் மதுரைமாநகரின்கண் சிவனெறி உண்மை எழுதிய திரு ஏட்டை நினற சீர நெடுமாறன் அவைமுன் வளர்ப்பிதத எரியிலிட்டுக் குறித்த காலம கழிதது எடுததனா; அது முன்னையினும பசசையாக விளஙகியது. உ வைவை யாற்றிலிட்ட திருபபாசுரம் எதிர்த்துச் சென்றது. ரு. திருமயிலாபபூரில் என்பினினறும பூம்பாவை அம்மையாா தோன்றத் திருப் பாட்டுப் பாடியருளியது ஆளுடைய அரசர், க. நஞ்சு கலந்த பாற்சோறுண்டது. உ. யானையை வணங்கச் செய்தது.

௩. கல்லே மிதப்பாகக் கடல் கடந்தது. ஆளுடைய நம்பி,
௧. முதலையுண்ட பிள்ளையை அழைப்பித்தது.

“ கொண்டுகுல சேகரனும் கோன்பால் வந்து
குருசாததோன் அருள்செய்த கொள்கை எல்லாம்
மண்டுபெருங் காதலுடன சொல்லி அந்த
வண்தமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்
கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகண்ட மந்திரங்கள் ஆதலோன் கூறல்
எண்டிசையும் சிவனருளைப் பெறுதற் காக
இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்நீ.”

—திருமுறைக்கண்ட புராணம், ௩௩.

மூவர் பாடல்: ஏழு திருமுறைகள் இவை முற்றும் கைகண்ட பெருமந்திரம்.

திருமுறை முற்றும் தமிழ்ப்பெரு மந்திரங்களே என்பது வெளிப்படையாகத் தோன்றத் திருமூலர் தமிழுக்குத் திருமந்திரம் என்னும் திருப்பெயர் வழங்குவதாயிற்று. தமிழ்ப்பாக்கள் அனைத்தும் மந்திரம் என்னும் மெய்ம்மை ஆறாயிரம் யாண்டுகளுக்கு முன்னுள்ள ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பிய மேற்கோளானும், பிற்காலத்து நல்லிசைப்புலவர் வாழ்வும் தாழ்வும் பாடிய தமிழ்ப் பாக்களானும் காணலாம். ஏனைய தமிழ்ப் பாக்கள் மந்திரம் எனவும், திருமுறைகள் பெருமந்திரம் எனவும் கூறப்பெறும்.

சிறப்பு

தொல்காப்பிய மேற்கோள் பாட்டு ஆரிய மயக்கொழித்துச் சீரிய செந்தமிழின் சிறப்புணர்த்தும் திறத்தால் அவற்றை இங்குக் காட்டுதும் :

“ நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.”

—தொல். பொருள். ௪௯௦

மேற்கோள் :

“ ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்க சுவா.”

“ முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிய
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்க சுவா.”

ஆனந்தம்—சாவு. சுவா இரண்டும் சிவா என இருந்திருக்குமென்பர். இவை நக்கீரரால் பாடப்பெற்றன.

திருவள்ளுவ நாயனாரும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" —திருக்குறள், ௨அ

என அருளினார்.

திருமூல நாயனார் தாம் தமிழாகமம் செப்ப வந்ததாகவும் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு இறைவன் படைத்தருளினன் எனவுங் கூறியருளுகின்றனர். அவை வருமாறு:

"நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே." —௧0. எ௩.

"பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே." —௧0. அ௧.

"தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணியவத் திருவருளால் அவ்வுலகைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசரருள் எனவுணர்ந்தார்."
—௧௨.—திருமூலர்—௨௩.

இங்ஙனமெலாம் மறையும் நூலும் (ஆகமம்) மல்கியிருப்பவும் பின்னும் குறை எனக் கூறுவார் குறையை என்சொல்வது? அவர்களுக்கு ஆண்டவனிடத்தும், அவன் உவக்கும் செந்தமிழினிடத்தும், அத்தமிழினையே அருளால் பாடி வையகமெலாம் அரன் நாமமாகிய 'சிவயநம' என்னும் தனித்திருமறையே சூழ்க எனப் பாடியருளிய செந்நெறி முதல்வர் நால்வரிடத்தும், இவற்றிற்கெலாம் இடனாகிய தமிழகத்தும், தமிழ்ப்பெருமக்களிடத்தும், திருமுறை சித்தாந்த மறைகளிடத்தும் உண்மையான பற்று வந்து அவற்றை உயிரெனக்கொண்டு, அகத்தும் புறத்தும் ஒழுகி வருமாறு அருள்செய ஆண்டவனை வேண்டுவோமாக. தமிழ்ச் செந்நெறி தழைத்தோங்குக.

திருக்கோவில்களிலும் திருமுறை வழியாகவே மலர் தூவிப் போற்றுதலாகிய அருச்சனை புரியத் தேவார முதலிகள் மூவரும், திருவாசகத்தாரும், ஏனைத் திருமுறை ஆசிரியன்மார்களும் "**போற்றி**"த் தொடர் அமைத்துக் கட்டளை யிட்டருளினர். அவ்வுண்மை கடைப்பிடித்து ஒழுகல் அடியவர் கடனாம்.

உன்னடியேன் செய்பணிகள் உன்தொண்டே உன்னருளே
உன்னடிக்கே ஒப்புவித்தேன்.

பள்ளிமாணவர் வார வழிபாடு

[சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை, கழகப்புலவர்]

ஞாயிறு

முழுமுதல்வன் உண்மை அறிவு இன்பவடிவினன். உண்மை அறிவு இன்ப நிகழ்ச்சி நிகழும் இடமெல்லாம் ஆண்டவன் விளக்கம் காணலாம்.

அறிவுருவான ஆண்டவனே! மாணவராகிய அடியேங்களுக்கு நல்லறிவைத் தந்தருளவீராக.

ஆகுக.

நல்லறிவு விளங்கும் இடமெல்லாம் உம்முடைய திருவருள் விளக்கம் கண்டு வணங்க, வாழ்த்த, சேர்ந்து வழிபட அருள் புரிவீராக.

ஆகுக.

பிறர் துன்பமும் தம்துன்பம்போல் உண்மையாகக் கருதி விரைந்து நீக்குவதே நல்லறிவாகும். அவ்வாறு செய்ய அருள்வீராக

ஆகுக.

அவ்வறிவு கல்வியால் விளக்கமும் உறுதியும் எய்தும். அத்தகைய கல்வியை இளமையிலேயே எங்களுக்கு அளித்தருள்வீராக.

ஆகுக.

குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதே நல்லறிவாகும். அந்நல்லறிவை அருள்வீராக.

ஆகுக.

நல்லறிவு வாய்ந்த நல்லோர்வழி ஒழுகுவதே நன்மையாகும். அங்ஙனம் ஒழுக அருள்வீராக

ஆகுக.

எல்லா உலகிற்கும் உயிர்கட்கும் ஒப்பில்லா ஒரு தனித் தலைவரே! உம்மை வணங்குகின்றோம். உமது திருவருள் கைவரப்பெற்ற தவத்தோரை எங்களுக்குத் தலைவராக அருள்வீராக.

ஆகுக.

மறந்தும் பிறன்கேடு செய்யக் கருதாதிருப்பதே நல்லறிவு. பிறர் கேடு செய்தாலும் அதனைப் பொறுப்பதே நல்லறிவு. அவர்கட்கும் நன்மை செய்வது சிறப்பு. அவ்வறிவை அருள்வீராக.

ஆகுக.

உம்முடைய திருப்பெயரைக் காதலாகிக் கசிந்து ஓதவும், ஓதுவிக்கவும், இன்புறவும் அருள்வீராக.

ஆகுக.

திங்கள்

ஒருவரோடு ஒருவர் உள்ளம் நெகிழ்ந்து இணங்கும் இணக்கம் நேயம் எனப்படும். இந்நேயம் அன்பு, ஆர்வம், நண்பு, காதல், அருள், பத்தி என அறுவகைப்படும். இவையே ஒற்றுமைக்கும், உண்மை இன்பத்திற்கும், உலக அமைதிக்கும் வாயில்கள் ஆவன.

இன்புருவான இறைவனே! உம் திருவடிக்கண் நீங்காப் பத்தியுடன் புகழ்ந்து தொழுமாறு அருள்வீராக. ஆருக.

அன்புருவான ஆண்டவனே! பகுத்தறிவு வாய்ந்த மக்கட் பிறப்பு குடும்பத்தாருடன் தொடர்புபற்றிச் செய்யும் அன்பி னாலே சிறந்தது. அதனை அருள்வீராக. ஆருக.

குடும்பம் என்பது ஈன்றாள் தந்தை உடன்பிறந்தார் என்ற முப்பெரும் பிரிவில் அமைந்தது. கணவன் மனைவி மக்கள் என்னும் முப்பெரும் பிரிவும் உண்டு. இவர்களோடு சேர்ந்து வாழ இன்புற அருளவீராக. ஆருக.

இன்ப வடிவாம் இறைவனே! குடும்பத்தைப் பேணுதலும், குடும்பத்துடன் ஒற்றுமையாக வாழ்தலும் சிறந்த இன்பம், அங்ஙனம் வாழ அருள்வீராக. ஆருக

குடும்ப அன்புப்பயிற்சி நின் திருவடிப் பத்திப் பயிற்சிக்கு வழி. ஆர்வம், நண்பு, காதல், அருள் முதலிய வற்றிற்கும் வழி யாகும். அதனை அருளவீராக. ஆருக.

குடும்பத்தார்பால் செய்த அன்பு அக்கம் பக்கத்தார்பால் செய்யின் ஆர்வம் ஆகும். உணர்வுத் துணையுடன் செய்யின் நண்பாகும். அவற்றை அருள்வீராக. ஆருக.

காதல் வடிவாம் கடவுளே! நாங்கள் நண்பர் சொல்வழி ஒழுக, நலம் பெற, கலவி கற்க, உரம் பெற, நாடு மொழி நன்னெறிகுப் பாடுபட அருள்வீராக. ஆருக.

அருள் உருவாம் மெய்ப்பொருளே! சிற்றுயிர்களிடத்து வைக்கும் அன்பு அருளாகும். அவ்வருளே நின் திருவருளைக் கூட்டுவிக்கும். மெலியவரிடத்து மிகுந்த இரக்கம் கொளவது அருள். அதனை அருள்வீராக. ஆருக.

செவ்வாய்

ஆற்றல் என்பது பிறர்க்கு நன்மை செய்து இன்புறுத்துவது. அவர்கள் அடையும் இன்பத்தைக் கண்டு இன்புறுவதே உண்மை யான இன்பமாகும். அறிவு தொழில் விழைவு என ஆற்றல் மூவகை. விழைவு - விருப்பம்.

போராற்றல் வாய்ந்த பெரும்பொருளே! எங்கள் அறிவாற்றல் நாட்டுக்கும், மொழிக்கும், நன்னெறிக்கும் பயன்பெற அருள்வீராக ஆகுக.

தொழிலாற்றல் விரிந்த வியன் உலகிற்கும் ஆருயிர்க்கும் மாறா நன்மைபுரிந்து இன்புறுத்த அருள்வீராக. ஆகுக.

விழைவாற்றல் தாய்மொழியும், ஆட்சிப் பொதுமொழியும், அனைத்துலகத் தொடர்பு மொழியும் வளர்ந்து சிறக்க விரும்பவும், தாய்மொழியே ஆட்சிச் சிறப்பு மொழியாகக் கொள்ளவும் அருள்வீராக ஆகுக.

அம்மை அப்பராக விளங்கும் ஆதிபகவனே! எங்கள் தொழிலாற்றலால் நாடு வளமுற அருள்வீராக. ஆகுக.

உடலுறுப்புப்போல் உலகியல் நிகழ்ச்சி செம்மையாய் நிகழ எல்லாத் தொழிலும் வேண்டத்தக்கன. அதனால் தொழில்களுள் ஏற்றத்தாழ்வு கருதாது உழைத்து உயர்வு பெற அருள்வீராக.

தொழில்களுள் ஏற்றத்தாழ்வு காட்டல் நாட்டுமுன்னேற்றத்துக்குத் தடையாகும். பிறர்க்குத் துன்பம் விளைக்கும் பாவத் தொழிலே தாழ்வாகும். உலகம் நன்கு மதிக்க எல்லாத் தொழிலையும் செய்ய அருள்வீராக. ஆகுக.

விழைவாகிய விருப்பமே விழுத்துணை யாவது. விழைவு இல்லாவிட்டால் ஒருவரும் உழைக்க முன்வரார். இன்பம் எய்தார். உண்மையாய் உழைக்க அருள்புரிவீராக. ஆகுக.

காக்கும் கடவுளே! உன் திருவடிக்கண்ணும், உன் அருள் பெற்ற மெய்யடியாரிடத்தும், பெரு விருப்பம் கொண்டு பணி செய்ய அருள்புரிவீராக. ஆகுக.

புதன்

கற்றல் என்பது உயிர்க்கு உறுதிதரும் அறம் பொருள் இன்பம் வீடு பேறு என்னும் ஐவகை நலங்களையும் பெற்று உய்வதற்குத் தக்க நூல்களைச் சான்றாண்மை மிக்க ஆசான்பால் அன்புடன் அகமுறக் கற்பது.

கற்றவர் நெஞ்சில் முற்ற உறைந்து வழிகாட்டும் கடவுளே! அடியேங்கள் பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக் கழகம், திருக்கோவில் முதலிய நிலையங்களில் நல்லன ஓதி உணர்ந்து உய்ய அருள்புரிவீராக. ஆகுக.

எல்லாக் கலைகளையும் எங்கள் தாய்மொழியாம் தமிழில் கற்க விருப்பங்கொள்ளுமாறும், அத்தமிழே எங்கள் உயிரெனக் கருதுமாறும் அருள்புரிவீராக. ஆகுக.

கற்பிக்கும் ஆசான், ஆன்றோர் முதலானவர்களிடத்தில் பணிவும், நன்மதிப்பும், பற்றுதலும் கொண்டு ஒழுகுமாறு அருள்புரிவீராக. ஆகுக.

தாய்மொழியாம் தமிழ் குறைவிலா நிறைவுடைய செம்மொழி இலக்கணம் நிரம்பிய புலமைத் துணைமொழி. அம்மொழிக்குத் தொண்டு புரியவும், பழமை போற்றுவதுபோல் புதுமை ஆக்கம் பேணவும் அருள்புரிவீராக. ஆகுக.

கற்கும் காலத்துக் கல்விக்கு முரணான வெளியுலக நிகழ்ச்சிகளிலும் காட்சிகளிலும் எங்கள் உள்ளம் ஒரு சிறிதும் செல்லாதவாறு காத்து அருள்புரிவீராக. ஆகுக.

செம்மை மனத்துறையும் செம்பொருளே! 'இளமையிற் கல்' என்னும் திருமொழியை மறவாது இளமைப் பருவத்திலும், வைகறைப் பொழுதிலும் நின்னடி வணங்கி நேர்மையுடன் கற்க அருள் புரிவீராக. ஆகுக.

கசடறக் கற்றல் வேண்டும். கற்றாரோடே இணங்கல் வேண்டும் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் கடவுள்நினைவு நல்வாழ்வாகும். அவற்றை அருள்வீராக. ஆகுக.

வியாழன்

கற்றலின் பயன் கற்பித்தலாம். முற்றும் கற்றுக் கற்பிக்க வேண்டும் என்று கருதுதல் பொருந்தாது. கசடறக் கற்ற அளவில் பிறர்க்கு அன்புடன் காலம் தாழ்த்தாது கற்பித்தல் வேண்டும். கற்பித்தலே கற்றற்குத் துணை.

கற்றவா விழுங்கும் கற்பகக் கனியே! எங்கள் கல்வி வளரவும், கற்கும் பொழுதே பிறர்க்குச் செய்யும் நல் உதவியை மேற்கொள்ளவும், கைம்மாறு கருதாம லிருக்கவும் வாய்ப்பாகிய கற்பிக்கும் ஆற்றலை அருள்வீராக. ஆகுக.

உதவுவார்க்கு ஊக்கம் அருளும் ஒண்பொருளே! உடன் பயில்வார்க்கும், கீழ்வகுப்பு மாணவர்கட்கும் எங்களாலியன்ற உதவியை நகைமுகம் இன்சொல் நன்றாற்றல் அமையச் செய்யும்படி அருள்புரிவீராக. ஆகுக.

கற்பித்தலாகிய இப்பணி கைகூடக் குடும்பத்தில் உடன் பிறந்தாருடனும், பிறருடனும் ஒற்றுமையும் உதவியும் உடையராய் வாழ்தல் வேண்டும். இதனால் நாட்டு நற்பணியும், முற்போக்கு வாழ்வும் பெருகும். அதற்குத் தகுந்த சூழ்நிலையை அளித்தருள்வீராக. ஆகுக.

கற்றல் கற்பித்தல்களால் பொன்னும் பொருளும் போகமும் புகழும் வாய்க்கும். நின் அன்பர் இணக்கமும் உண்டாகும். நின் திருவடித் தொழுகையும் நிலைக்கும் திருவுடையாளம் மேற்கொள்ளுதலும் எளிதாகும் அவற்றிற்காம் துணைகளை அருள் புரிந்து காப்பாயாக. ஆகுக.

வாய்மைத் திருவுருவாம் வள்ளலே! கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவன அகம் புறம் தூய்மை. அவை அமைய அருள்வீராக. ஆகுக.

உறையுள், உடை, உடல், உண்கலம், உழைப்பு, உறவு முதலியன தூய்மை யாதலே புறந்தூய்மை. வாய்மையே அகம் தூய்மை. அதனை அருள்வீராக. ஆகுக.

வெள்ளி

ஆட்சி என்பது ஆண்மையின் விளைவு. ஆண்மை பிறர் வாழ்வுக்குத் துணை செய்வது; அவர்களால் நன்றி பாராட்டி நன்கு மதிக்கப்படுவது.

அனைத்துயிர்க்கும் ஆண்மை அருளும் அண்ணலே! பிறர் நலம் பேணும் பேராண்மை தந்து அருள்வீராக. ஆகுக.

நல்லாண்மை அருளும் நாயனே! நாங்கள் எங்கள் பொறி புலன்களை அடக்கி ஆளவும், கற்றவற்றை மறவாது மீட்டும் மீட்டும் நினைக்கவும், புதுப்பாடங்களை எமக்குரிய முழுவூக்கத்துடன் கற்றுத் தேறவும், திறம்பெறப் பணிபுரியவும் அருள்வீராக. ஆகுக.

"நல்லாண்மை என்பது தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக் கொள்ளல்". ஆண்மையுடையார் தீமை அகற்றி நன்மை கைக்கொள்வர். யாங்களும் அவ்வாறு ஒழுகிப் பெயரும் புகழும் பெருவாழ்வும் எய்த அருள்வீராக. ஆகுக.

நன்மை யுருவாம் நம்பி! பணிவு, இன்சொல், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலியன நின்பொன் உருவே யாகும். அடியேங்களுக்கு அந்நன்மைகளை மேற்கொண்டு ஒழுகும் நல்லறிவும் நல்லுறவும் அருள்வீராக. ஆகுக.

ஆட்சித் தலைவராம் ஆண்டவரே! எல்லா உலகமும் உம்முடைய திருவருளாட்சி. அந்த ஆட்சிவழி ஒழுகி நற்பயன் எய்தி நலமுடன் வாழ அருள்வீராக. ஆகுக.

ஆட்சிச் செம்மையால் மழை விளைவு ஒழுக்கம் எல்லாம் மேன்மேலும் உயரும். மழையும் நின்னருளே. வளம்பெருகும். மக்கள் வாழ்வு உயரும். அதற்கு அருள்வீராக ஆகுக.

அடக்கி ஆள்வதும் அல்லல் உறுத்துவதும் ஆட்சியன்று. அருளன்பால் மக்களும் மாநிலத் தலைவரும் தக்கவாறு ஒழுகுவதே ஆட்சி. அதனை அருள்வீராக. ஆகுக.

சனி

ஆக்கம் என்பது திருவருள் நோக்கம். திருவருள் நோக்குடையாரே பொருவரும் ஆக்கம் உடையாராவர். செம்பொருளைத் தொழும் சீரியராவர்.

ஆக்கம் அருளிக் காக்கும் அருந் துணையே! கல்வியால், நண்பால், சுற்றத்தால், தொழிலின் முறையால் உண்டாகும் செல்வமே தூய ஆக்கமாகும். அதனை அருள்வீராக ஆகுக.

அற்றவர்க்கு உற்ற அருந்துணையே! எவ்வகைத் துணையும் இல்லாதவர்கட்கு நாங்கள் ஏதும் உதவ முன் வருவோமானால் அது நின்னுடைய திருவருளைப் போற்றும் பெருந்தொண்டாகும். அதனை அருள்வீராக ஆகுக.

எல்லாம் அருளும் எந்தாய்! கல்வி நிலையம், மருத்துவ நிலையம், முதியோர் இல்லம், குழந்தை இல்லம், திருக்கோவில், திருநெறிக் கழகம், தொழிலகம், கூட்டுறவுப் பண்ணை முதலியவற்றிற்கு இயன்றவாறு எக்காலத்தும் உதவி செய்ய அருள்வீராக ஆகுக.

வையம் காக்கும் வள்ளலே! வைகறைத்துயிலெழல், யாமத் துறங்கல், மீதூண் விரும்பாமை, நல்லாரிணக்கம், வீட்டுவழிபாடு, கூட்டுவழிபாடு, திருக்கோவில் வழிபாடு யாண்டும் செவ்வையாக நிகழ்த்த அருள்புரிவீராக. ஆகுக.

உடலுரத்திற்கு உடற்பயிற்சி வேண்டும். உளநலத்திற்குத் தெய்வ வழிபாடு வேண்டும். தெய்வ வழிபாட்டிற்குச் சிறந்தோர் துணை வேண்டும். இவைகளே அழிவிலா ஆக்கம். இவற்றைத் தந்து காத்தருள்வீராக. ஆகுக.

நோயற்ற வாழ்வு, தீங்கற்ற செல்வம், பாங்குற்ற நண்பு, ஓங்கும் வாழ்க்கை, பகையையும் உறவாக்கும் நகைமுகம், நாடு மொழி நன்னெறி காக்கும் பீடுகளே ஆக்கம். அவற்றை ஆன்றோர் துணையுடன் அடியேங்கள் பெற அருள்வீராக. ஆகுக.

குறுகத்தறித்த குறள்

[திரு. பி. எல். சாமி. பி. எஸ் ஸி]

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (788)

இக்குறளில் வள்ளுவர் ஒரு எளிய-ஆனால் ஆழ்ந்த பொருளுள்ள-அழகான உவமையைக் கையாண்டுள்ளார். அதன் நயம் 'நவில்தொறும் நூல்நயம்போல்' எண்ணி உன்னுந்தொறும் இன்பத்தைத் தருகின்றது.

மேலாகப் பார்ப்போருக்கு இந்த உவமை எளியதாகவும் ஆழமற்றதாகவும் தோன்றலாம். அன்றாடம் வேட்டிகட்டிப் பழக்கமான நமக்கு இடுப்பில் ஆடை நழுவுவதும், அதைக் கட்டுதற்குக் கை செல்வதும் ஒரு எளிய நிகழ்ச்சியாகத் தோன்றலாம். ஆனால் அத்தகைய எளிய பொருளை உவமையாகக் கொண்டு அதில் அரிய ஆழ்ந்த கருத்தைக் காட்டுவதே வள்ளுவரின் சிறப்பு.

நண்பனுக்கு இடுக்கண் வருங்கால் காலத்தில் உதவ வேண்டும். உறாமுழி உதவாவிடில் உதவி பயனற்றதாகிவிடுகிறது. உற்ற காலத்தில் உதவுவதும் முடியும்வரை விரைவில நடைபெறவேண்டும். உதவி செய்பவன உதவியின் தன்மை, பயன் முதலியவைகளை எண்ணிய பின்னர் துணியக்கூடாது. அதற்குள் உதவி செய்யும் காலம் கடந்துவிடும். அதனால்தான் வள்ளுவர்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்றார். மற்றும்,

"பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது."

காலத்தினால் பயன் கருதாது செய்யப்பட்ட நன்றி அளவிட முடியாத நன்மை வாய்ந்தது என்று வள்ளுவர் கூறுகிறார். "காலத்தில் செய்த ஒரு தையல், ஒன்பது தையல்களை மிச்சப்படுத்தும்" (A stich in time saves nine) என்று ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. காலத்திற் செய்யப்படும் உதவி விரைவில் செய்யப்படவேண்டும். எண்ணித் துணியாது செய்யப்பட வேண்டும் என்ற இரு கருத்துக்களை வலியுறுத்த வள்ளுவர் மேற்கூறிய உவமையைக் கையாண்டார். இனி உவமையின் பொருத்தத்தைப் பார்க்கலாம்.

கழன்ற ஆடையைக் கட்டக் கை விரைந்து செல்வது உடல் நூற்படி (Physiology) அனிச்சைச் செயல்களில் (Reflex

action) ஒன்று. காலில் முள் உறுத்துகிறது, உடனே காலைத் தூக்கி முள் தைக்காது காப்பாற்றிக் கொள்கிறோம். இஃது ஒரு அனிச்சைச் செயல். பொதுவாக ஐம்புலன்களால் உணரப்பட்டு நிகழும செயலகளெல்லாம் நம் இச்சைக்குக் கட்டுப்பட்ட செயல்கள் ஐம்புலன்களால் அறியப்பட்ட செய்திகள் உணர்ச்சி நரம்புகளால தண்டுவடத்திறகு எடுத்துச் செல்லப்படுகின்றன. தண்டுவடத்திலிருந்து அச் செய்தி மூளைக்குச செல்கிறது; மூளை செய்திக்கேற்பக் கட்டளை இடுகிறது, கட்டளை தண்டு வடததின் வழியாக வநது கட்டளை நரம்புகளால் உறுப்புகளுக்கு எடுத்துச செல்லபபடுகிறது செயல் நிகழ்கிறது. ஆனால் அனிசசைச் செயலில் செய்தி தண்டுவடத்திற்குச சென்று மூளைக்குச் செலவதிலலை தண்டுவடமே மூளைக்குப் பதில் கட்டளையை விடுக்கினறது. இதனுல் தண்டுவடத்திலிருநது மூளைக்கும் மூளையிலிருந்து தண்டுவடததிற்கும் செய்தியும கட்டளையும செல்லுங்காலம மிசசமாகிறது. இதனுல் அனிசசைச் செயல பொதுவான செயல்களைவிடக் குறுகிய காலததில் விரைவாக நிகழ்கிறது.

பெரும் இடுக்கண் வருங்கால் செய்தி மூளைகருச் சென்று கட்டளை வருவதற்குள் இடுக்கண் நிகழ்ந்துவிடும் ஆதலின் இடுக்கணிலிருந்து தபபிக்கச் செயல் விரைவில் நடக்கவேண்டும. அதற்கு அனிச்சைச் செயல் பயன்படுகிறது. இடுப்பில ஆடை நழுவியதும் செய்தி தண்டுவடத்திற்குச் சென்று, தண்டுவடம் உடனே கைக்குக கட்டளையிடுகின்றது. இதில் மூளை எண்ணு வதோ துணிவதோ கிடையாது. இச்செயல் எப்படிப் பயன் கருதாது சிநதிபபதின்றி விரைவில் நிகழ்கினறதோ அதுபோல நண்பர்களும ஒருவனுக்கு இடுக்கண் வருங்கால் விரைவில் பயன் முதலியவைகளைத் தூக்கித துணியாமல் அவ்விடுக்கண் களைய முன்வர வேண்டும். திடீரென்று குலையும் ஆடையைத் தளையக் கை விரைவதுபோல ஒருவனைத் தளையும இடுக்கண் களைய அவனுடைய நண்பர் விரையவேண்டும்.

இச் செயலின் கால அளவைக் கணக்கிட்டுப் பார்க்கலாம். தமிழில் சொலலப்படும் மிகச் சிறிய கால அளவு மாத்திரை எனப்படும. "இயலபெழு 'மாந்தரிமை நொடி மாத்திரை" என்றார் நன்னூலார். இவ்விரண்டினும் நொடியைவிட இமை சிறநததென்பார்; ஏனெனில் உள்ளத்தால் நினைத்து நிகழாமை யின் என்று விளக்கங் கூறுவர். இமைபபது 'வசமில் செயல்' (Involuntary action) என்பர் உடல் நூலார். இமைப்பின் கால அளவை அளநதிருக்கிறார்கள். மேலிமையில் ஒரு சிறு ஆடி யைக் கட்டி அவ்வாடியில் விழுந்து விலகும ஒளிக்கற்றையை

நிழற்படம் பிடிப்பதன் மூலம் இமைப்பின் காலத்தைக் கணக்கிட்டனர். மேலிமை கீழே செல்வதற்கு ·05 (செகண்டுகள்) விநாடிகளும், கீழே பொருந்தியிருப்பதற்கு ·15 விநாடிகளும், மேலெழும்புவதற்கு ·02 விநாடிகளும ஆவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள் ஆனால் பொதுவாக இயல்புடைய ஒரு மனிதனுக்கு ஒரு இமைப்பிற்கு $\frac{4}{10}$ (அ) ·4 விநாடி ஆகிறதென்று சொல்லலாம். ஆதலின் மாத்திரை என்பது ·4 விநாடி இயல்பான ஒரு மனிதனின் உடலில அனிச்சைச செயல இதைவிட மிக விரைவாக நடைபெறுகிறது ஒரு விநாடிக்கு 120 மீட்டர் வேகமாக அனிசசைச் செயல செல்கிறது. இயல்பான மனிதனின் உடலில இடுப்பிலிருந்து கைவிரல்களுககு அனிச்சைச் செயல் செல்ல $\frac{8}{1000}$ (அ) ·008 விநாடிகள் ஆகும. ஆதலின் உடுக்கை இழந்தவனுககுக் கை உதவுவதற்கு ஏறககுறைய ·008 விநாடிகள் ஆகிறது. இது கண்ணிமை மூடும காலத்திலும் குறைவானது. ஆதலின் உதவுவதன் விரைவினை வலியுறுத்த வநத வள்ளுவா இததகைய விரைவான செயலை உவமையாகக் கூறினா.

மற்றும் மானததைக் காக்கக் கை உதவுவதுபோல் வேறு எநத உறுப்பும் பயன் படுவதில்லை. துச்சாதனன் திரௌபதையைத துகிலுரிந்தபோது கையன்றோ மானங்காக்க விரைநதது! உண்மை நிகழ்சசி என்று கருதப்படும் ஒரு செய்தி இதனை வலியுறுததும. வெகு காலமாகக கீழே வராது முடங்கிக் கிடநத கைகளையுடைய ஒரு பெண்ணை டாக்டா அரங்காசசாரியிடம் கொண்டுவந்தார்கள. அவா உள்ளத்தின் உண்மையை நன்கு உணர்ந்தவர். அவர் அப் பெண்ணை ஒரு அறையில தனியாக நிற்கச்சொல்லித் திடீரென்று அப் பெண்ணின் இடுப்பில் இருக்கும ஆடையை அவிழ்ப்பதுபோல் செய்தார். ஆனால் முடங்கிக் கிடந்த கை மானததைக் காக்க விரைந்து சென்றது அன்றையிலிருந்து அப் பெண்மணிக்கு கை கீழும் மேலும் நன்றாக வநதது என்பார்கள். இதிலிருந்து மானததைக் காப்பதில் கையிற் சிறநத உறுப்பில்லை என்பது தெரிகிறது.

ஒருவனுககு இடுக்கண் வந்தால் காலத்தில்-விரைவில் பயன் தூக்காது உதவவேண்டும உதவி செய்யப்பட வேண்டிய 'வல் விரைவை' வலியுறுத்தவே வள்ளுவர் உடுக்கை இழநதவன் கை போல விரைவில உதவ வேண்டுமென்றார். இச் சிறப்பினாலேயே,

"அணுவைத துளைததேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறிதத குறள்"

என்று ஔவையார் கூறினார்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[திரு. மயிலை சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு. உ௮, பரல் க௦, சகூஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

64. இராமீசுரக் கோவை

இக்கோவையை இயற்றியவர் கயாதர நிகண்டு செய்த கயாதரர் ஆவார் இதனைக் கயாதர நிகண்டுச் செய்யுளினால் அறியலாம். என்னை?

> "மேவு மரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
> தாவும் வினைகெடச் சாற்றிய தென்றமிழ்த் தேவையென்னுங்
> கோவை யிராமீசுரக்கோவை சொன்ன குருபரன்மற்
> றேவுதலின்றி யமைத்தான் பதத்தாவ தொலியியலே."

என்னும் செய்யுள் காண்க. தேவைநகரம் என்னும் பெயருள்ள இராமேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது இக் கோவை பாடப்பட்டது இக்கோவையை இயற்றிய கயாதரர் தமது பெயரால் கயாதரம் என்னும் நிகண்டுநூலை இயற்றி யுள்ளார். கயாதரசம் இப்போது அச்சிடப்பட்டுள்ளது இவர் இயற்றிய இராமீசுரக் கோவை கிடைக்கவில்லை, இறந்துபட்டது போலும். இராமீசுரக் கோவை கி. பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டுள்ளது.

65. நூல்

நூல் என்னும் பெயருள்ள நூல் ஒன்று இருந்ததென்பது இறையனார் அகப்பொருள் உரை, அடியார்க்கு நல்லார் உரை, மயிலைநாதர் உரைகளினால் தெரிகிறது.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், உரைப்பாயிரத் தில் இந்நூலைக் குறிப்பிடுகிறார் அவர் எழுதுவது வருமாறு:—

"நூற்பெயரென்பது நூலது பெயர் என்றவாறு. நூல் பெயர் பெறுமிடத்துப் பல்விகற்பத்தாற் பெயர்பெறும். என்னை? செய்தானாற் பெயர் பெறுதலும் செய்வித்தானாற் பெயர் பெறு தலும் இடுகுறியாற் பெயர் பெறுதலும் அளவினாற் பெயர் பெறுதலும் சிறப்பினாற் பெயர் பெறுதலுமென செய்தானாற் பெயர் பெற்றன, அகத்தியம் தொல்காப்பியம் என இவை. செய்வித்தானாற் பெயர் பெற்றன, சாதவாகனம் இளந்திரையம் என இவை. இடுகுறியாற் பெயர் பெற்றன, நிகண்டு, நூல், கலைக் கோட்டுத் தண்டென இவை. அளவினாற் பெயர் பெற்றன, பன்னிருபடலமென்பது. சிறப்பினாற் பெயர் பெற்றது களவிய லென்பது."

மயிலைநாதர் நன்னூல் உரையில் இவ்வாறு கூறுகிறார் — "இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு, நூல், கலைக்கோட்டுத் தண்டு"

நூல் எனப் பெயரிய இந்நூல், நாடகத் தமிழைப் பற்றிக் கூறும் நூல் என்று தெரிகிறது. இந் நூலிலிருந்து இரண்டு சூத்திரங்களை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுகிறார். சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அவர் எழுதுவது வருமாறு:—

"இறக்கவே வரும் பெருங்கல முதலிய பிறவுமாம். இவற்றுட் பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும் இப் பெற்றிக்கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்தியல்வது. என்னை?

'ஆயிர நரம்பிற் றாகியா ழாகும்
ஏனை யுறுப்பு மொப்பன கொளலே
பத்தர தளவுங் கோட்டின தளவும்
ஒத்த வென்ப விருமூன் றிரட்டி
வணர் சாணொழித் தெனை வைத்தனர் புலவர்'

என நூலுள்ளும் ....கூறினாராகலாற் பேரியாழ் முதலியன ஏனவும் இறந்தனவெனக் கொள்க."

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 129—130-ஆம் அடிகளாகிய, "இயல்பினின் வழாஅ திருக்கை முறைமையிற், குயிலுவ மாக்கள் நெறிப்பட நிறுப்ப" என்னும் அடிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், நூலிலிருந்து மற்றொரு சூத்திரத்தை மேற்கோள் காட்டுகிறார். அவர் எழுதுவது இது :—

"முறைமையாவது

'ஆடிட முகக்கோ லாட்டுவார்க் கொருகோல்
பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல்
குயிலுவர் நிலையிட மொருகோல'

என்று நூலிற் கூறின முறையெனக் கொள்க."

இதனால் நூல் என்னும் பெயருள்ள நூல் நாடகத் தமிழ் நூல் என்பது தெரிகிறது. இந் நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

66. மழவை யெழுபது

மழவை என்பது மழபாடி என்னும் ஊர். அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட எழுபது பாக்களைக் கொண்ட மழவை யெழுபது என்னும் நூல் ஒன்று

இருந்தது என்பது, களவியற் காரிகை உரையினால் தெரிகிறது. களவியற் காரிகை யுரையாசிரியர், மழவை யெழுபதிலிருந்து ஒரு செய்யுளை மேற்கோள் காட்டியுள்ளார். அச்செய்யுள் இது:

செருமலை தானவர் முப்புரந் தீயெழத் தேவர்கட்கும்
வருமலை தீர்த்தவன் மாமழபாடியில் வந்தெதிராத
கருமலை வீட்டிய செம்மலை யன்றிக் கறங்குவதிம்
மருமலை கூந்தலை யார்கொள்ள வேண்டி மணமுரசே.

இந்நூல் அகப்பொருள் துறைகள் அமையப் பாடியது எனத் தெரிகிறது. இதைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

67. பரிமாணனார் யாப்பிலக்கணம்

பரிமாணனார் என்பவர் இயற்றிய ஒரு யாப்பிலக்கண நூலை யாப்பருங்கல விருத்தியுரைகாரரும், மயிலைநாதரும் தமது உரைகளில் குறிப்பிடுகிறார்கள் பரிமாணனார் நூலிலிருந்து சில சூத்திரங்களையும் மேற்கோள் காட்டுகிறார்கள்

இந்தப் பரிமாணனார் என்பவர் யாவர், எந்தக் காலத்தில் இருந்தவர், இவர் செய்த யாப்பிலக்கண நூலின் பெயர் என்ன என்பவை ஒன்றும் தெரியவில்லை. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

இந்நூலிலிருந்து, யாப்பருங்கல விருத்தியுரைகாரர் கீழ்க்கண்ட சூத்திரங்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டியுள்ளார் :—

வஞ்சி யாசிரிய மென்றிரு பாட்டும்
எஞ்சா மூவடி யிழிபுயர் பாயிரம்.
　　　　　　　　அவற்றுள்,
ஆசிரிய மென்ப தகவலின் வழாது
கூறிய சீரொடுந் தளையொடுந் தழீஇ
முச்சீ ரடியா யீற்றயல் நின்றும
அச்சீ ரடியிடை யொரோவழித் தோன்றியும்
அவ்வியல் பின்றி மண்டிலம் ஆகியும்
மூவடி முதலா முறைசிறந் தேறித
தொள்ளா யிரத்துத் தொண்ணூற் றெண்ணிரண்
டெய்து மென்ப வியல்புணர்ந் தோரே.

வஞ்சிதானே யடிவரம் பின்றி
யெஞ்சா விசைநிலை தூங்க லெய்தியும்
ஆசிரிய மாகியு முடியு மென்ப.

செப்ப லோசையிற சீர்தளை சிதையாது
மெய்ப்படக் கிளந்த வெண்பா விரிப்பிற்
குறளே நெடிலென மூன்று யவற்றின்
இறுதி யடியே முச்சீர்த் தாகி
யதனீற் றசைச்சீ ரெய்தி யடிவகை

யோரிரண்டு முதலா முறைசிறந் தீரா
றேறு மென்ப வியல்புணர்ந் தோரே.
(யாப்பருங்கலம். அடியோத்து. 10. உரைமேற்கோள்)

அவைதாம்,
முதலோ டயல் கொள்வ திணையய வின்றி
மூன்றுஞ் சீரது பொழிப் பிரண டிடைவிட்
டிறுதியொடு கொள்வ தொரூஉ விறுதிச
சீரொழித தேனைய தொன்றிற் கூழை
முதல் றடைநதவற றினமை யிருவகைக
கதுவாய முற்று நிகழவது முற்றே
முதலோ டெட்டாகு மென்மனா புலவா

என்றா பரிமணனா. அவா இயைபுத் தொடைக்கு விகறபம் வேணடிற்றிலா. என்னை?

செநதொடை யியைபிவை யல்லா நான்கு
முதற்சீ ரடியால் விகற்பங கொளப

என்றாராகலின்

"அடிமுழு தொருசீா வரினஃ திரட்டை"

(யாப்பருங்கலம் தொடையோத்து. 17. உரை மேற்கோள்)

மயிலைநாதா, தாம எழுதிய நனனூல் உரையில (பொதுவியல் 51-ஆம் சூததிரம) பரிமாணனா சூததிரம ஒனறை மேற்கோள காட்டியுளளாா. அது:

'விதந்த மொழியினம வேறுரு செப்பும' என்றார் பரிமாணனா என்பது.

68. பல்காபபியம்

பலகாப்பியனார் இயற்றிய பல்காப்பியம் என்னும் இலக்கண நூல் ஒன்று இருநதெதன்பது பேராசிரியர் உரையினால் தெரிகிறது. பலகாபபியம தொலகாபபியததின் வழிநூல. இது செய்யுளிலக்கணத்தை மட்டும் கூறுவது. இந்நூலைப்பறறி வேறு செயதிகள தெரியவில்லை.

தொல். பொருள், மரபு, "வழியெனபபடுவது அதன் வழிததாகும" எனனும் சூத்திர உரையில பேராசிரியர் இநநூலைபபறறி எழுதுவது வருமாறு:—

"மற்றுப பலகாப்பியம் முதலியனவோவெனின், அவை வழிநூலே; தொல்காப்பியததின வழித் தோன்றின வெனபது. என்னை?

'கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த றொலகாப் பியன்ற
னாணையிற் றமிழறிந் தோர்க்குக கடனே.'

என்பவாகலானும், இவ்வாசிரியா பல்காப்பியர், பல்காயனர் முதலாயினரை அவ்வாறு கூறுராகலானுமென்பது. என்றூர்க்குத் தொல்காப்பியங் கிடப்பப் பல்காப்பியஞர் முதலியோர் நூல் செய்த தெற்றுக்கெனின்,—அவரும அவர் செய்த எழுத்துஞ் சொல்லும பொருளு மெல்லாஞ் செய்திலா. செய்யுளிலக்கணம் அகததியத்துட் பரநது கிடநததனை இவவாசிரியர் (தொல்காப்பியர்) சுருங்கச் செய்தலின அருமை நோக்கிப் பகுத்துக் கூறினாராகலானும அவா தந்திரததுக்கேறப முதனூலோடு பொருநத நூல் செய்தாராகலானும் அமையுமென்பது ”

பல்காப்பியச் சூததிரங்கள் ஒனறேனும் கிடைக்கவில்லை.

69　பல்காப்பியப் புறனடை

பலகாப்பியனா இயற்றிய பலகாப்பியம என்னும் நூலுக்குப் பலகாப்பியப் புறனடை என்னும் சார்பு நூல ஒன்று இருந்ததென்பது பேராசிரியர் உரையினல் தெரிகிறது பல்காபபியப் புறனடையும பல்காப்பியனரே இயற்றியிருக்கவேண்டும என்று கருதலாம

தொல்: பொருள: மரபு: “வினையி னீங்கி விளங்கிய வறிவின, முனைவன் கணடது முதனூ லாகும” என்னும் சூத்திரத்திறகு உரையெழுதிய பேராசிரியர், பலகாபபியப் புறனடையிலிருந்து ஒரு சூததிரததை மேற்கோள் காட்டுகிறா. அது வருமாறு :—

‘ கூறிய குன்றினு முதனூல் கூட்டித
தோமின றுணாத றெல்காப் பியன்றன்
ஆணையின் றமிழறிந தோர்ககுக கடனே ’

இது பல்காபபியப் புறனடைச சூததிரம ”

இதனல, அவிநயம் என்றும இலக்கண நூலுக்கு நாலடி நாற்பது எனனும அவிநயப புறனடைநூல் இருநததுபோலவும், யாப்பருங்கலம என்னும இலக்கண நூலுககு யாப்பருஙகலக் காரிகை என்னும புறனடை நூல ஒன்று இருபபதுபோலவும் பல்காப்பியம என்னும் இலககண நூலுக்குப பல்காப்பியப் புறனடை என்னும் ஓர் புறனடைநூல இருநதது என்பது தெரிகிறது.

70. கிளவி விளக்கம்

களவியல் காரிகை உரையாசிரியர், கிளவி விளக்கம் என்னும் இந்நூலைக் குறிப்பிடுகிறா. வன்னாட்டு நெய்தல்வாய் என்னும் ஊரிலிருநத ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு வெண்பாவினல் இயற்றப்பட்டது இந்நூல். இது

அகப்பொருள் சார்பான நூல். இந்நூலாசிரியரின் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. இந்நூலிலிருந்து களவியல் காரிகை உரையாசிரியர் மூன்று செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். அச்செய்யுள்கள் இவை :—

என்னுயிர் நான்கண் டிளமுலையும் வேய்த்தோளும்
பொன்னிறமுங் கொண்டு புனமயில்போல்—மன்னி
வயங்குகின்ற செய்தலவாய (வனனுடன்) வெற்பி
லியங்குகின்ற தாயத் திடை.

சோகக முலைமேற் சிறியோர் பெரும்பொருள்போல்
பாரகு மறைக்கும் பலகாலும்—கார்க்கொடையால
வனைக் கலிகடந்த வனனுட னெய்தல்வாய்
நினைக்கத் தழைவாங்கி நின்று

அருக்கன் வருவதன்முன் னம்புயப்பூங் கோயிற்
றிருக்கதவ மாரோ திறந்தார்—மருககமழ்தார்
வனனுட னெய்தலவாய வலலியில் வலலிருளில்
என்னுட னீவருவா னீங்கு.

71. தில்லையந்தாதி

சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது இயற்றப்பட்ட அந்தாதி நூல் இது அகப்பொருள் துறையமைந்த செய்யுள்களைக் கொண்டது என்று தோன்றுகிறது இந்நூல் ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை இந்நூலிலிருந்து ஒரு செய்யுளைக் களவியற் காரிகையுரையாசிரியர் தமது உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். அச்செய்யுள் இது :—

தொடிவா னரமங்கை யன்றிமைக குங்கண்கள் தோயுநிலத்
தடிவா னரந்த மலரும புலரு மயன்றலையைத்
தடிவா னரன .... ..தாழ்சடை யோன்றில்லை யூசல்வலலிக்
கொடிவா னரம்புரி யும்பொழில வாயவந்த கோல்வளைக்கே.

72. கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம்

கடிய நன்னியார் என்னும் புலவர் கைக்கிளைச் சூத்திரம் என்னும் நூலை இயற்றினார் என்பது, யாப்பருங்கல விருத்தியுரையினால் தெரிகிறது. யாப்பருங்கலம் செய்யுளியல் 2-ஆம் சூத்திர விருத்தியுரையில் உரையாசிரியர், கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார் :—

"கைக்கிளையும், வெண்பா முதலாய ஆசிரியம் ஈறாய் வருகின்றுழி ஆசிரியவடி இரண்டேயாய அவற்றுளீற்றடி நாற்சீராயீற்றயலடி முச்சீரானே வருவதெனக் கொள்க. என்னை ?

'இருதலைக் காம மனறிக் கைக்கிளை
யொருதலைக் காம மாகக் கூறிய
விலக்கண மரபி னியல்புற நாடி

யதர்ப்பட மொழிந்தனர் புலவ ரதுவே
பெறுதி வெணபா வுரிததாய் மற்றதன்
இறுதி யெழுசீ ராசிரி யமமே.'

'வெண்பா வாசிரி யததாய் மற்றதன்
இறுதி யெழுசீ ராசிரி யம்மே'

'கைக்கிளை மருட்பா வாகி வருகா
வாசிரியம் வருவ தாயின் மேவா
முசசீ ரெருததிற ருகி முடியடி
யெசசீ ராறு மேகார த திறுமே'

"இது கடிய நன்னியார் செய்த கைக்கிளைச சூத்திரம்"

யாப்பருங்கலம், செய்யுளியல 18-ஆம் சூததிர விருத்தி யுரையில், உரையாசிரியர் கடிய நன்னியாரை மேற்கேள் காட்டுகிருர். அது :—

"கைக்கிளைப் பொருள்மேல் ஆசிரியம வரும்வழி எருத்தடி மூச்சீரான் வரபபெறு வென்பா கடிய நனனியார் எனக் கொள்க. என்னை ?

'கைககிளை யாசிரியம் வருவ தாயின்
முசசீ ரெழுததின் ருகி முடிவடி
யெசசீ ராறு மேகார த திறுமே'

என்ருராகலின்" கடிய நனனியாரைப பற்றியும், அவர் இயற்றிய கைக்கிளைச் சூததிரததைப பறறியும வேறு செய்திகள தெரியவில்லை.

73. பரத சேனுபதீயம்

இஃது, பரதநாட்டியததைப பறறிக் கூறும் நூல் இதனை இயற்றியவர் ஆதிவாயிலார் என்பவர் "ஆதிவாயிலார் செய்த பரத சேனுபதீயம" எனறு அடியாரககு நலலார் சிலப்பதிகார உரைச்சிறப்புப பாயிரததில் எழுதுவதனுல் அறியலாம. இந்நூலைப பற்றியும ஆசிரியரைப பற்றியும வேறு செய்திகள் தெரியவிலலை இநநூலிலிருநது சில செய்யுட்களை அடியார்க்கு நல்லார் தமது சிலபபதிகார உரையில மேறகோள் காட்டுகிருர். அச் செய்யுளகள இவை :

"பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட்
புணணிய வோரை புகன்றனகொண—டெண்ணியே
வணடிருககுங கூந்தல் மடவரலை யையாணடிற்
றண்டியனுசோ விப்பதே சால்பு.

எனவும்,

வட்டணையுந் தூசியு மணடலமும் பண்ணமைய
எட்டெ ணிரிரண்டாண் டெயதியபின்—கட்டளைய
கீதக குறிபபு மலஙகார முஙகிளரச
சோதித தரஙகேறச சூழ.

எனவும்,

நன்னர் விருப்புடையோ னற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையனாயப்-பன்னிரண்டாண்
டெய்ந்ததற்பி றுடலுடன் பாடல்அழ கிம்மூன்றும்
வாய்ந்த வரங் கேற்றல் வழக்கு.

எனவும் கூறினார் பரத சேனாபதியார்.”

(சிலம்பு: அரங்கேற்று: 10-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரைமேற்கோள்.)

[மேற்காட்டிய செய்யுள்களில், “வட்டணையுந் தூசியும்” என்னும் இரண்டாவது செய்யுளை, நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி 673-ஆம் செய்யுள் உரையில் மேற்கோள் காட்டு கிறார்.]

உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின்வருநோ கேடு
துவர்ப்பிற பயமாஞ் சுவைகள்—அவற்றிற்
புளிநோய்பசி காழ்ப்புப் பூங்கொடியே ரித்திப்
பனிபெருகு மாவ தரங்கு

என்றார் பரத சேனாபதியார்.

(சிலம்பு: அரங்கு. 106-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

“ அரிதாரங்கிற்
செயதெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரைபு
மெயத வெழுதி யியற்று.”

என்றார் பரத சேனாபதியார்.”

(சிலம்பு அரங்கு - 109-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

“ புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு
கண்ணிடைக கணசாண் கனருசாரு—மெண்ணிய
நீளமெழு சாண்கொண்டு நீராட்டி நன்மையுளை
நாணிற் றலைக்கோலை நாட்டு.”

‘ ஆவ தகத்தியனா சாபத்தா னென்மூங்கில்.’

என்றார் பரத சேனாபதியார்”

(சிலம்பு: அரங்கு: 116-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

(தொடரும்)

எழுத்தும் புணர்ச்சியும்

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(செல்வி, சிலம்பு: ௨௮. பரல்: ௧௦-இன் ௪௯௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு தமிழ்ப் பாதுகாப்புக்கென்த தனிக்குழு இருக்குமாயின் இற்றைநாள் புதுவனவாகக் கண்டுபிடிக்கப்பெற்று மேலை நாட்டில் இருந்து வெளிவந்துலவும் பற்பல வகைப் பொருள்கட்கு அவ்வந்நாட்டுச் சொற்களால் நந்நாட்டில் பெயர்கள் வழங்காது 'ரேடியோ' வானொலியாக வழங்கும்; 'ஏரோப்பிளேன்' வானூர்தியாக வழங்கும், 'மோட்டார்' உந்துவண்டியாக வழங்கும்; 'சைக்கிள்' ஈருருளியாக வழங்கும். பிறவும் இவ்வாறே இச்சென்னைநகரிலுங்கூட வணிக நிலையப் பெயர்ப்பலகைகள் (Name Boards) எங்கே பார்த்தாலும் தமிழ்மொழியல்லாமல் வேற்றுமொழியில் எழுதப்பெற்றே தொங்குகின்றன ஒன்றிரண்டு தமிழில் எழுதப்பெற்றிருக்குமானால் அவைகள் வேற்றுச் சொல்லைத் தமிழெழுத்தால் எழுதியிருக்கும். அவை 'ஹேர் டிரசிங் சலூன்' (மயிர் முடி திருத்தகம்) 'பாரத் லாண்ட்ரி' (பாரத் சலவைத் தொழிலகம், துணி வெளுப்பு இல்லம்) 'கிளாத் மெர்ச்சண்ட்' (புடைவைக்கடை) 'ஜூவெல்மார்ட்' (பொன் வணிகக்கடை, நகை வாணிபம்) என்றெல்லாம் எழுதப்பெற்றிருக்கும். இவைகளெல்லாம் யாண்டுளது? எதற்கெடுத்தாலும் வேற்றுமொழிச்சொற்கள், வேற்றுமொழியெழுத்துக்களே! இஃது என்ன தமிழ்நாடா? தமிழ்நாடாயின் தமிழில் பெயருண்டா? எழுத்துண்டா? புகைவண்டி நிலையங்களில், கார்களில், கார் நிலையங்களில் எழுதியிருக்கும் சொற்களைச் சொற்றொடர்களைப் பார்த்தால் மானவுணர்ச்சியுள்ள தமிழன் எவனும் தலைகவிழாமல் இருக்கவொண்ணாது! அங்கே எழுதியிருக்கும் கொடுமை ஆண், பெண் என்றால் எவருக்கும் நன்கு விளங்கும். புருஷர்கள், ஸ்திரீகள் என்றால் யாருக்குப் புரியும்? இவைதான் எழுதப்பெற்றிருக்கும் போதாக்குறைக்கு இந்தி, நாட்டுக்கு வந்து புகைவண்டி நிலையங்களிலும் அரசியலார் அலுவலகம் முதலிய இடங்களிலும் இந்திமொழி தலைமையேற்க அதற்குக்கீழ் ஆங்கிலமும் அதற்குக்கீழ் அடிமையாக நந்தமிழும் எழுதப்பெற்றுள்ளன. இவை நகைப்புக்கு இடனாக அமைந்துள்ளன. இவ்விழுக்கு தமிழ்மொழிக்கன்றி ஏனைய மொழிகள்பால் இல்லை. ஆங்கிலத்திலோ வேறு இந்திய நாட்டு மொழிகளிலோ அவ்வம்மொழிகளே ஆங்காங்கே வரைந்திருக்

கும் முதலில் ஒரு சொற்கேற்ற எழுத்தில் ஒன்றுந் திரிபுபடாமல் எழுதுதல் வேண்டும். தமிழில் எப்படியும் எழுதலாம் அதைக் கேட்பதற்கு ஆள் கிடையாது. பழத்தைப் பளம் என்று வரையலாம். அவர், அவற், மழை மளை கற்கண்டு கல்கண்டு, பால்குடம் என்றெல்லாம் தீட்டலாம். கேட்பாரில்லை இவ்வாறெழுதுதற்குப் பேசுதற்கு ஒரு கூட்டம்—பாராட்டும் ஆட்டம்—இங்கேதான் உண்டு. மற்ற நாடுகளிற் பிழைபட இவ்வாறெழுதினால் கன்னம் வீங்கக் கைச்சாத்திடுவான். அஃது ஆங்கே; இஃது ஈங்கே. இலக்கணம் வேண்டா! அது இருப்புக்கடலை; படிக்கிற பிள்ளைகளைத் தலைகிறுக்கச் செய்யும் என்று கூறுகின்ற கிறுக்குக் கூட்டம் இன்னும் நம் நாட்டில் இருக்கின்றதென்றால் அது தமிழ்நாட்டைப் பிடித்த ‘சனி’ என்றேதான் கூற வேண்டும் எதற்கும் வரம்பு - ஒழுங்குவேண்டும் அஃதின்றேல் எதுவும் முறையொடு படாது வழுவாகும். இலக்கணம் ஒழுங்கை நிறுத்துதற்கே அமைத்த வரம்புச் சட்டம். அஃதின்றேல் ஒரு மொழி வளர்ச்சியடைய முடியாது. இதை இவ்வாறு வழங்கவேண்டுமென்பதற்கு வரையறை கூறுவதே அஃது. இலக்கணம் இன்றேல் கரும்பைக் கறும்பு என்றும், மலையை மளையென்றும், கலையைக் களையென்றும், கற்பைக் கல்பு என்றும், வெற்றியை வெல்தியென்றும் எழுதி மொழியைக் குட்டிச்சுவராக்கலாம். ஆகவே, ஆண்டவர்களே! உங்களை ஒன்று வேண்டுவல்! தமிழைத் தமிழக்கண்கொண்டு பார்த்து அதன் இயற்கைக்கு முரணாது, தமிழ்மொழியை நன்கு பயிலுங்கள். அதுவே, கடமையென்பதையும் உணருங்கள் சாயம் பூசிக்கொண்ட நரிபோற் பிறரையும் கெடுக்க எண்ணாமல்,

‘குருடும் குருடும் குருட்டாட் டமாடிக்,
குருடும் குருடும் குழிவீழ்ந் தற்றே.’

என்னும் திருமூலர் மொழிக்கு இலக்காகாது,

‘எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.’

என்னும் வள்ளுவர் உண்மை மொழிப்படி உண்மையைக் கண்டு ஒழுகுமின்.

இதுபோழ்து தமிழை ஆட்சிக்குக் கொணரும் கிளர்ச்சிகள் தொடாங்கு நிகழ்கின்றன. அதற்கு எக்கொள்கையினரும் மாற்றுரை கிளத்தாது ஏற்றுத் தம்மாலியன்ற துணைபுரிந்து நம் மொழியை ஆட்சியில் நிறுத்தவேண்டும்; அப்போதுதான் நாடு நாடாக மிளிரும்; அப்படியானால்தான், தமிழர் பிறநாட்டாரோடு ஒத்த தன்மையராய்த் தலைநிமிர்ந்து நிற்க இயலும்.

அதற்கு ஒல்லும்வகை கடனாற்றல் தலையாயது எனக்கொள்ளல் வேண்டும்.

இற்றைநாளில தமிழ்மொழியை எழுத்துக்களால் சீர் திருத்தும் குழுவினரும், தமிழ்த் தொடர்களைச் செய்யுட்களை ஆற்றொழுக்குப்போல இடையறுதோடும ஒலியமைப்பைச் சந்தி பிரித்தெழுதுகின்ற குழுவினரும, கொள்கையினருமாக நாட்டிற் பல்கிப் பிற்கால வருங்கால மக்கட்கு வெண்பா இன்னது, ஆசிரியப்பா இன்னது, கலிப்பா இன்னது, வஞ்சிப்பா இன்னது, விருத்தம் இன்னது என்று தெரிதற்கு இயலாவாறு குற்றிய லுகர முற்றியலுகரப் புணர்ச்சிகளையும் வலலின மெல்லினப் புணர்ப்புக்களையும் எதுகை மோனைகளையும பாராது பிரிக் கின்றனர். அவ்வாறு பிரிப்பது ஒவ்வாத ஒன்றேயாகும். கற்கும ஊழ கருவிலேயே யமையப்பெற்றவர் கற்றே தீருவர், கற்கும ஊழ கைவரப் பெறார்க்கு மலைபோல் நூல்களைக் குவிப் பினும, சொற்றொடர்களைக காலவேறு கைவேறாகப் பிரித்து நூல் எழுதிக்கொடுப்பினும் கற்கப் போவதில்லை. இதனாலேயே,

> ‘ இருவே றுலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு ’

எனவும்,

> ‘ புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியார
> உய்த்தக மெல்லாம் நிறைப்பினும்—புத்தகததைப்
> போற்றும் புலவரும வேறு பொருடெரிந்து
> தேற்றும் புலவரும் வேறு ’

எனவும் போநத பெரியார் திருமொழிகளும் பிறந்தன.

புணர்ச்சியின் இயல்பு

புணர்ச்சியென்னும் சொல், சேர்க்கை, கூடுதல், ஒன்றுதல், இணைதல் என்னும பொருள் தருவதாகும். ஈங்கே கூறப் புகுவது எழுததுப் புணாசசி. உலகப் பொருள்களில் எதை யெடுத்தாலும சேர்க்கையின்றி-ஒன்றோடொன்று கூட்டுறவில் லாமல் நிகழ்வதேயிலலை. எங்கும் இணைப்பிலலாது ஒன்றும் இயங்கக் கண்டிலேம் மக்களும் ஒவ்வொருவரும் கூடியே எதையும செய்யும் ஆற்றல் பெறுகின்றனர். இவ்வாறே எழுத் துக்களும் இணைந்தே ஆற்றல் பெறுகின்றன.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் தாமே வேறு எழுத் துக்களின் கூட்டுறவின்றி இயங்குவனவேனும் அவைகளும் நுட்பமான சிறுசிறு ஒலிக்கூட்டங்கள் ஒன்றுபட்டே உருவா

இன்றன. அகரவுயிர் தோன்றி உருவாதற்கு முன் எழும் அளவிற் குறைந்த ஒலி, 'நுட்ப அகரம்' என, வழங்குவர் ஆன்றோர். இவ்வொலி நுண்மையைக் குறிக்கோளாகக்கொண்டு சமயப் பெரியாரும் இறைவனை,

'ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே'

என்றருள்வதும் காண்க.

இவ்வாறு தோன்றிய உயிர்களின் சார்பு பெற்றே மெய்யெழுத்துக்கள் இயக்கமடைகின்றன. 'க' என்னும் மெய்யெழுத்து க்+அ,=க என்னும் இரண்டன் சேர்க்கை ககரமும் இதுபோன்ற ஏனைய மெய்யெழுத்துக்கள் பதினேழும் உயிரின் துணையின்றி ஒலியா. 'க்' என்பதை 'இக்' என்றாலும் 'க' என்றாலும் இகரமேனும் அகரமேனும் ஒன்றுபடாமல் ஒலிப்பதில்லை. இதனைக் கூர்ந்தறிந்தே நம் சான்றோர், 'இக்' என ஒலித்தால் முதலில் மெய்யெழுத்தொலி எழுவதில்லை. உயிரெழுத்தொலியாகிய இகரமே ஒலிக்கின்றது. அவ்வாறொலி யெழின் மெய்யெழுத்தொலியாகாது எனக் கொண்டு க்+அ=க ஆக எழுதியமைத்து மெய்யொலியை முதலில் ஒலிக்கச் செய்தனர். உயிர் சேர்ந்த அடையாளமே மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளியில்லாதிருப்பது புள்ளியிடின் அது தனி மெய்யாகும். தனிமெய் சொற்களின் இடையே உயிர்முன்பேதான் தோன்றும். இதனான் உயிர்மெய்யெழுத்துக்கு இலக்கணங்கூறிய நன்னூலார்

'புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்'

என்றார்.

(தொடரும்)

இராச நாயகம்

[பெருமழை, புலவர். பொ வே சோமசுந்தரனார்.]

(சிலம்பு - உஅ ; பரல் - அ, சா0சு-ம் பக்கத் தொடர்ச்சி.)

நமது செந்தமிழ்ப் பெருங் காப்பியமாகிய இராசநாயகத்தின் ஒப்பற்ற தலைவி பல்கீசு நல்லாளைப்பற்றிய குறிப்புகள் பலவற்றை 'நார்மன் ஸ்டோனபியனர்' என்னும் அறிஞர் வரைந்த கட்டுரை ஒன்றிற் கண்டு காட்டினும் அக் கட்டுரை, அண்மையில் நிகழ்ந்தேறிய இரண்டாவது உலகப் பெரும் போரின் தொடக்க நாளிலே வரையப்பட்டதாகும் இரண்டாவது உலகப் பெரும் போருக்குக் களப்பலி யூட்டிக் காலகோள் செய்த நாடு 'அபிசீனியா' என்பது யாவரும் அறிந்ததொன்று. அந் நாட்டு மன்னர் மன்னனை கெயலி சிலாசின மரபிற்கே நம் பல்கீசு நல்லாள் முதல்வியாவள் என்று அக் கட்டுரையாசிரியர் காட்டியுள்ளனர்.

மண் மூடிக் கிடக்கும் 'மாரெப்' நகரிற் கண்ட புதை பொருட் சான்று கொண்டு, அவ் வறிஞர் வரைந்த வரலாற்றுக் குறிப்புகள் பலவும், நமது இராசநாயகக் காப்பியத்திலே விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல்கீசு உலகப் பேரழகி, அந் நாட்டிற்கோர் புதுமைப்பெண் எனறெல்லாம் அவ் வாசிரியர் புகழ்ந்தார். வண்ணக்களஞ்சியப் புலவரோ, தம் காப்பியத் தலைவியின் பேரழகையும், வீரத்தையும், கற்புடைமையையும் காவியச் சுவைபட நன்கு கூறியுள்ளனர்.

பல்கீசு பிறக்கும்போதே அரசிளஞ் செல்வியாகப் பிறந்தவள் என்று அக் கட்டுரையிற் கூறப்பட்டதற்கு மாறாக, நம் வண்ணக்களஞ்சியப் புலவர், அவள் ஒரு சிறந்த அமைச்சன் மகளாகத் தோன்றித் தனது பேரறிவாலும், பேராற்றலாலும் முதன்முதலாகத் தானே அரசுகட்டில் ஏறியவள் என்று கூறுகின்றனர் இவள் அரசுகட்டில் ஏறிய வரலாறு, இராசநாயகத்தில் மிகவும் சுவையுடைய பகுதியாக விளங்குகின்றது. இராசநாயகத்திற் காணப்பட்ட அவ் வரலாறு வருமாறு .

பெரும்புகழ் படைத்த சபநகர மன்னர் மரபில் 'சுருயிகு' என்னுந் தீயவன் ஒருவன் தோன்றினன். அவன் இயல்பிலேயே மிகவும் கொடியவனும், காமுகனுமாக இருந்தனன்.

"பொய்வகை களவு நிந்தை
கொலைமதுப் புசித்தல் என்னும்
ஐவகைப் பவங்கி ரீட
மாயதற் கடுத்த புன்மைச

செய்வகை எவையு மேதேகக்
கலன்களாய்ச் சிறக்கப் பூண்டு
மொய்வகை இபுலீசுக்கு
முதன்மகன் ஆயி னானே."

என்று, வண்ணக்களஞ்சியப் புலவர் இவனை நமக்கு அறிவிக்கின்றார்.

காவியங்களிலே யாம் பற்பல காமுகக் கயவர்களைக் கண்டுள்ளேம் எனினும், இவன் றன்னைப் பெருங் கயவரை யாண்டுங் கண்டிலேம். தனது ஆட்சிக்கீழமைந்த பரந்த நாட்டின்கண் அழகோடே பிறந்த மகளிர் அனைவரும் இவனது கொடிய காம வேட்டைக்கு ஆளாகினர். இம் மன்னன் அவைக்களத்தே அமைச்சுரிமை பூண்டிருந்தான் பல்கீசு நல்லாளின் தந்தை 'யூசறுகு' எனபான் இவன்,

"இத்தகைக் கொடுங்கோல் செய்யும் எந்தலுக் கமைச்ச னானோன்,
சத்திய மொழியின் மாறான், சகலநூற் கலையுந் தேர்ந்தோன்
புத்தியிற் கால மூன்றும் புரையறப் பிரித்துச் சொல்வோன்
பத்திகொள் ளுலகம் யாவும் மயங்கெழில் படைத்துள் ளோனே."

எனப் போற்றப்பட்டுள்ளான்.

காமுகனான சுறாயிக்கு வேந்தன், தன் நாட்டிலுள்ள பருவம் வரப்பெற்ற அழகிகளை, அவ்வப்போது கண்டு வந்து தனக்குக் கூறும்படி பற்பல ஒற்றர்களை நாடெங்கும் வைத்திருந்தான். அமைச்சன் யூசறுகுக்கு இறையருளாலே தோன்றிய பல்கீசுவோ மணப் பருவத்தை எய்தினாள். அவள் முக்காலத்திலும் இருந்திராத அழகுத் தெய்வமாகத் திகழ்ந்தாள். அவ் வழகிக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் பல்கீசு என்பதேயாயினும், அந் நாட்டறிஞர் அவளைச், 'சூறத்துல் ஈமன்' என்னும் சிறப்புப் பெயரானே அழைக்கலானார். சூறத்துல் ஈமன் என்னும் தொடர்க்கு, 'ஈமன் நாட்டுக் கடவுள் மலர்' என்பது பொருள் என வண்ணக் களஞ்சியப் புலவர் விளக்குகின்றனர்.

தன் செல்வியின் பேரழகு வளர வளர, யூசறுகின் உளத்தே அச்சமும் வளர்வதாயிற்று. 'இவள் அழகினைச் சுறாயிக்கு அறிந்தால், அந்தோ! என் நிலை என்னாம்!' என்று எண்ணி நடுங்கினான். தனக்குள் நீளச் சிந்தித்துத் தன் மகளை அழைத்துக்கொண்டு இரவிலே பிறர் அறியாமல் சபேயிய அரசின் எல்லையைக் கடந்து வேறு நாட்டிற்குச் செல்வதே உறுதியாம் என்று துணிந்து, இக் கருத்தைப் பல்கீசுவிற் குணர்த்தி அவளை உடம்படும்படி வேண்டினான்.

வீரவுள்ளம் படைத்த பல்கீசு, தன் தந்தையின் கோழைமைக்குப் பரிந்தாளேனும், அவன் வேண்டுகோட்கு இணங்க மறுத்தாள். "அன்புமிக்க தந்தையே! தீமைக்குப் புறங் காட்டுதல் அறிவன்று; அதனை எதிர்த்து அழிப்பதே ஆண்மையாகும். அதனை அழிக்க இயலாவிடின், அதன் கண்முன்னே நாம் இறந்து பிணமாய்க் கிடத்தலே வேண்டும். காம வேடனாகிய சுறுயிக்குவுக்கு அஞ்சி யாம் ஓடிவிட்டேமாயின் நாமமட்டுமே அவன் தீமைக்குத் தப்புவோம். என்போன்ற கற்புடைமகளிர் பலரையும் அவன் கெடுப்பது திண்ணம். ஆதலின் யான் என் உயிர் கொடுத்தேனும் அவன் தீமைக்குத் தப்புவேன். இன்றேல் என்னுடைய வீரத்தாலே அத் தீயவனைக் கொன்று சபேயிய நாட்டு மகளிர்க்கு விடுதலை யளிப்பேன். நீங்கள் விரும்பியபடி இந் நகரத்திலே வாழ்வதை விட்டு, இந் நகரத்தை அடுத்து நமக்கோர் மாளிகை எடுத்து அதன்கண் என்னை வையுங்கள். யான் பின்னர் இக் கொடுங்கோலனை அழிக்க வழி காண்பன்," என்றாள்.

தன் அருமந்த மகளின் வீரவுரை கேட்ட யூசறுகு, வேறு வழியின்றிப் பல்கீசு நல்லாளைச் சபா நகரத்தை அடுத்த ஒரு பூங்காவில் எடுக்கப்பட்ட தன் மாளிகையிற் பிறர் அறியாவாறு கொண்டுபோய்ச் சேர்த்தனன்.

சுறுயிக்குவின் கூரிய கண்படைத்த ஒற்றர்கள், பல்கீசு நகர்ப்புறத்துத் தனி மாளிகையில் வசிப்பதனையும், அவள் அழகாலே ஈமன்நாட்டுக் கடவுள் மலர் எனப் புகழப்படுவதையும், கண்டுங் கேட்டும் தம் வேந்தனுக்கு உணர்த்தினர். சூறத்துல் ஈமன் என்னும் பெயர் கேட்ட துணையானே, "அத் தெய்வ மலரின் தீந்தேனைப் பருகும் வண்டல்லனோ இச் சுறுயிக்கு மன்னன்," எனத் தனக்குத் தானே வாய்விட்டுக் கூறினன்; "விரைந்து போய் அமைச்சன் யூசறுகை என்முன் அழைத்து வம்மின்!" என்று தூதரை ஏவினன்.

எந்தப் பொழுதிலே, என்ன கேடு வந்துறுமோ! என அஞ்சிக்கிடந்த யூசறுகு, நம்மை அரசர் அழைக்கின்றார் எனத் தூதர் கூறக் கேட்டலும், இடியொலி கேட்ட அரவென நடுங்கி, அரசன்பாற் சென்றான். அவனும் யூசறுகை அன்போடே வரவேற்று,

"ஒளிப்பதேன் அமைச்சர் ஈன்ற
　　ஒண்டொடி யினரை வேந்தர்க்
களிப்பதும் வேந்தர் பெண்ணை
　　அமைச்சர்கட் களிக்கு மாறும்

வளப்பெரும் புவியி லென்றும்
வழக்கமே யன்றோ நீநின்
மொழிக்கரும் பினைக்கல் யானை
முடித்தெனக் குதவு கென்றான்.”

இங்ஙனம், இதனை எளிதாகவே சுருயிக்கு, யூசறுகின்பால் மகட்பேசி முடித்தான் இம்மொழிகளைக்கேட்ட யூசறுகின் நிலையினை வண்ணக்களஞ்சியப் புலவர்,

“கங்கத்தை அழைக்கும் வேலான்
கதைத்த சொல் காதினுள்ளே
வங்கத்தை யுருக்கிச் சாய்த்த
வருத்தமொத் தயர்ந்து வாடிப்
பங்கத்தை அடையுங் காலம்
இஃதெனப் பதைத்து நெஞ்சில்
துங்கத்தை யுடையோய் கேட்டுச்
சொல்வனென் மகளை என்றான்.”

எனத் தக்கதோர் உவமைகொண்டு அழகாக விளக்கியுள்ளார்.

தன் தந்தையினது வேண்டுகோளை மறுத்து நகர் அண்மையிலே தனி மாளிகையிற் குடியேறிய பல்கீசுவும், அம்மாளிகையிலே வாளா இருந்துவிடவில்லை. தன் ஆருயிர்த் தோழியர் பலரைத் தனக்கு ஒற்றர்களாக ஆக்கிக்கொண்டாள். அவ்வொற்றர் வாயிலாய்ச் சபாநகரக் குடிமக்களும், பெருநிதிக் கிழவரும், அமைச்சரும், படைத்தலைவரும் ஆகிய மாந்தர்கள், காமுகனாகிய சுருயிக்குவின் திறத்தில் எத்தகைய மனப்பான்மையுடையராக இருக்கின்றனர் என்பதை, ஆராய்ந்து அறிந்துகொண்டாள். நகரப் பெருமக்கள் அனைவரும், சுருயிக்குவை அகத்தே வெறுத்துப் புறத்தே நட்டு ஒழுகுகின்றனர் என்றும், அக்கொடுங்கோல் மன்னனின் வீழ்ச்சியை ஒவ்வொருவரும் ஆவலுடனே எதிர்பார்த்திருக்கின்றனர் என்றும், நன்கு தெரிந்துகொண்டாள். சுருயிக்குவின் காமவேட்டைக்குத் தான் இரையாகாது தப்புதல் அரிதென அவள் நன்குணர்ந்தாள் எனினும், அக்காமக்குணத்தின் உதவியாலேயே அவனைத் தன் வயப்படுத்தி, அவன் உயிரைப் போக்குதற்குரிய வழியினையும், இந்நிகழ்ச்சியிலே தனது கற்பைப் பேணிக்கொள்ளும் வழியினையும், அவள் நுண்ணிதின் ஆராய்ந்து தெளிந்துகொண்டாள். இவ்வழிச் சபேயிய அரசுகட்டில் தன்னுடையதாகும் என்பதும் அவள் முடிபாகும்.

இத்தகைய செயலிலிருந்த பல்கீசுவின்பால் யூசறுகு ஓடி வந்தான். “என் அருமை மகளே! என் சொற்கேளாது கெடுத்-

தொழிந்தனையே! எளியேன் இப்பொழுது என்செய்கேன்! அந்தோ என்னிளம் பிணைமானே! நின்னை அச்சுறுயிக்கென்னும் கொடும்புலிக்கோ இரையாக்குவேன்!" என்று பற்பல கூறி அழுதான். தந்தையின் பேதைமைக்கு அகத்தே குறுநகைகொண்டாள் பல்கீசு. "தந்தையே! பொறுமையுடனிருங்கள், அறம் வெல்லும் பாவந் தோற்கும்" என்றாள்.

உய்தற்கு வழிகாணுது என் அன்பே!

"அன்று யான் உரைத்த வண்ணம்
ஆயதென செய்கேன் அந்தோ!
உன்றனக் கிசைத்த புத்தி
யணுவு முன்னாது நீத்தாய்!
சென்றிதற் கென் சொல்வேன்? கட்
செவியின்வாய்த் தேரை யானேம்"

எனக் கல்லுமுருகக் கதறியழுத தந்தையின் செவியிடைச் சில மறை புகன்றாள். அம்மறை கேட்டபின்னர் யூசுறுக்கு முகம் சிறிது ஒளிபெற்றுத் திகழ்ந்தது. "என் நங்கை வல்லள்" என அவளைத் தன் நெஞ்சினுள்ளே பாராட்டினான். "முதுக்குறைவி! இனி நீ காட்டிய நெறியே யான் நடப்பன! இப்போது அக்கய வேந்தனுக்கு யான் என் சொல்லவேண்டும்? நீயே கூறுதி" என்றான்.

"எந்தாய்! நீயிர் மன்னனை அணுகி, 'வேந்தே! நீ என் மகளை விரும்புவதனினும் பன்மடங்கு என்மகள் நின்னை விரும்புகின்றாள். திருமணம் என் சிறு மாளிகையிலே சிறப்பாக நிகழவேண்டும். அத்திருமணத்திற்கு, நமது நகரப் பெருமக்களும், அமைச்சர்களும், படைத்தலைவரும், பிறரும் தத்தம் பெண்டிரோடும், பிள்ளைகளோடும் வந்து எளியேமிடம் விருந்துண்டு மகிழவேண்டும். இஃது என் அருஞ்செல்வியின் விருப்பம் ஆகும். இன்னே மணவினை தொடங்குக!' என்று உடம்பட்டோதுக. பின்னர் நிகழ்வன காண்க!" என்று பல்கீசு தந்தைக்குக் கூறி உய்த்தாள். அவனும் சுறுயிக்குவின் அவைக்களம் சென்று பல்கீசு கூறியவெல்லாம் அவனுக்குக் கூறினான்.

பல்கீசு தன்னை மிகமிக விரும்புகின்றாள் என்ற செய்தி கேட்டதும்,

"பெற்றனம் அரம்பை இன்பப்
பேறெனு வயிர மாலைக்
கற்றடம் புயம்பூ ரித்துக்
கஞ்சுகி கிழிந்த தன்றே"

என்பர் புலவர் பெருமான் கேட்டவுடன் கஞ்சுகி (சட்டை) கிழிந்ததாம் இனி, அத்தீயவன் உடல்கிழிய இஃதோர் நிமித் தமும் ஆகலாம்.

இனிப் பல்கீசு நல்லாள் விரும்பியபடியே சுருயிக்கு மன்னனும் "மணச்சிறப்பவையும் செய்து, மிகுந்திடுங் கிளைஞர், நண்பர், வேதியர், அரசர் மேலும், தருமபரி சனர்கள் சூழச் சங்கமே எங்கள் ஆர்ப்ப, நிகழ்ந்தெழில் குலவுந," தெய்வ மாளிகைக்கு வந்து வதுவைக்கியன்ற புறச்சடங்குகள் எல்லாம் நிகழ்த்தினான்.

பல்கீசு நல்லாளின் விருப்பப்படியே அமைச்சன் யூசறுக்கு, அம்மன்னனோடே வந்த அளவிலா மாந்தர் அனைவருக்கும் அறுசுவையுண்டி விருந்து நல்கிப் போற்றினான். அன்று மாலைப் பொழுதினும் இரவின் முற்பகுதியினும் இன்னிசை விருந்து களும், ஆடல் விருந்தும், அமரரும் அதிசயிப்ப நிகழ்ந்தன.

மணவினைப் புறச்சடங்கெல்லாம் மகிழ்ந்தாள் போன்று ஏற்றுக்கொண்ட பல்கீசு நல்லாளின் பேரழகிலே, சுருயிகுப் பெரிதும் அழுந்தி, "என்னே! இவள் மானிட மடந்தையோ! தெய்வ நங்கையோ! அழகின் அழகோ!

"விண்ணுல கரம்பை மாதர்க
 கரசியை விலைகொள மாதோ!
மண்ணில கரிவை யார்கண
 மணியொளி மழுக்கும் வேறோர்
பெண்ணிதோ! சோதி தானோ!"

என்று அப்பெண்ணுளளே தன் கூற்றுவன் கரந்துறைதல் அறியாது மயங்கிக் கிடந்தான்.

காலம் இடையறாது ஓடிக்கொண்டே இருக்கின்றதன்றோ? இரவின் முதல் யாமம் கழிந்தது; இடையாமம் எய்திற்று.

தோழியர் சுருயிக்கு மன்னனுக்கு, "அந்தமின் மணிக ளாலே" ஆலத்திசுற்றி "நின்தீமை ஒழிவதாக! இந்நாடு வாழ்வதாக!" என வாழ்த்துப் பாடினர். சிலதியர் பற்பல வாயில்களைக் கடந்து பள்ளியறைக்கு வழிகாட்டி மணமகனை அழைத்தேகினர்.

பள்ளியறையின்கண்ணே, முன்னரே பல்கீசு நல்லாள் "பட்டுடுத்து அணிகள் பூண்டு, பரிமளந் திமிர்ந்து சோதி, விட்டொளிர்மணிக் கிரீடம் தரித்துமென் மலர்கள் சூடி"

அழகுத் தெய்வமாக அமர்ந்திருந்தவள், எதிர்கொண்டு இன் முகம காட்டி வரவேற்று, ஆண்டோர் மணியாதனததே இருத்தியபின்னர், "கிட்ட நின்றவரில ஓர் பெண்கிளியின்பால் ஏதோ சொன்னுள்" அவள் சென்று மணிவள்ளஙகளிலே 'காம பானம்' நிரபபிக கொணாநதாள். ஒரு வளளம் பலகீசுவின்பாற் கொடுக்கப்பட்டது,மற்றெனறு சுருயிககுவின் கையிற்சோநதது. சுருயிக்குவின கண்கள பலகீசுவின அழகைப பருகின; அவன் வாய் வளளத்தைச சுவைததுப பருகிற்று; வளளததிலிருநத இனிமையூட்டபபட்ட நஞ்சோ அவனது அறிவையும உயிரையும் ஒருசேரப பருகிற்று.

மயங்கி வீழ்நத மனனன சுருயிக்குவின் தலையை ஒருததி வாள்கொண்டரிநது வேறு வைததாள். பின்னா அவன் முததிரை மோதிரததைக் கழற்றி, ஒரு முடஙகல் வரைநது அதன்கண மோதிரம ஒற்றி முததிரையிட்டு மணமன்றததிலே ஆடல் பாடலில் ஈடுபட்டிருநத படைததலைவாககும, அமைசசர்கட்கும் காட்டும்படி பலகீசு ஒரு தோழியினபாற் கொடுததுப் போக்கினுள். அததோழி கொண்டுவநத கட்டளையை ஒரு அமைச்சன படிதது மறறையோாககு அறிவிததான் அக்கட்டளை வருமாறு:

"சபேயிய நாட்டு மன்னர் மன்னன் சுருயிக்குவின் கட்டளை! இன்றிரவு எமது பள்ளியறை இனபத்தை மிகுவிக்கும் பொருட்டு அமைசசரும, சேனைததலைவரும, பெருநிதிககிழவரு மாகிய நீங்கள அனைவீரும நுங்கள் இளமனைவியா அனைவரை யும் எம் பள்ளியறைக்கு வருமபடி செய்துவிட்டு நீயிர் நுங்கள் மாளிகைக்குச செல்மின். நாளை நும மனைவியா நுமபால் உய்க்கப்படுவர். இக்கட்டளையை மீறுவோர் கொலைத்தண்டனைக் குரியவர் ஆவர்," என்பதாம்.

இக்கட்டளையைக் கேட்டவுடனே படைத்தலைவர் முதலி யோர் வெகுளி பொஙகியவராய,

"உழைத்தனன் நரகிற் போகும் உழைப்பெலாம்
பெரியோா நெஞ்சைக்
குழைததனன மிகுந்த பெண்கள் கற்புகள்
குடிபோக் கெண்ணித
தழைததனன் இவையே யல்லால்
நமதுபெண டீரைத தானே
அழைத்தனன் படுகசை வீட்டிற்
கதிசய மிதன்மே லுண்டோ!"

"நேயத்தைக் கெடுத்த பாவி
அரசென்று நிலைத்த தன்றே
ஞாயத்தைக் கெடுத்தான் முன்னோர்
நாமத்தைக் கெடுத்தான் நந்தம்
தேயத்தைக் கெடுத்தான் சேர்ந்தோர்
சிறப்பையுங் கெடுத்தான் பொய்யாம்
காயத்தை நிலையென் றெண்ணிக்
கருமங்கள் தலைமேற் கொண்டான்"

என்றிவ்வாறு பலரும் பற்பல கூறிச் சினந்து ஆரவாரஞ் செய்வாராயினர்.

இங்ஙனம் இவர்கள் சினத்தைத் தூண்டவே பல்கீசு இத்தந்திரத்தைச் செய்தாள். இவர்கள் சினமூண்டு செய்யும் ஆரவாரத்தைக் கேட்டவுடன், நம் நினைவு இனி நிறைவேறுதல் உறுதி என எண்ணி மகிழ்ந்தவளாய்ப் பள்ளியறையைவிட்டுச் சில தோழியர் புடைசூழ மணமன்றத்திற்கு வந்தனள். பல்கீசுவினைக் கண்டவுடன் அனைவரும் ஆரவாரம் ஒழிந்து, அந்நல்லாள் யாது கூறப்போகிறாள் என்று ஆவலோடே எதிர்பார்த்து நின்றனர். அவர்களை அமரும்படி செய்து புன்முறுவல் பூத்த முகத்தினளாய் அவர்கள் முன்னிலையில் நெடியதோர் சொற்பொழிவு ஆற்றினள்.

(தொடரும்)

திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் மறைவு பற்றிய

கையறவு நிலை

சிந்தையினில் அன்புடையாய்! சீலமிகும்
நல்லறிஞ! சிறந்த நந்தம்
செந்தமிழ்ச்செய் மாதவமே! நேர்மைதரு
வழக்கறிஞ! செய்ய பண்பார்
கந்தசா மிப்பெரியோய்! தமிழ்நூலாய்
திறனுடையாய்! கவினும் மண்மேல்
அந்தமிலாப் புகழுடனே அமர்ந்திட்டாய்
மண்விட்டாய்! அந்தோ! அந்தோ!

வித்துவான், தி. மு. சங்கரலிங்கம்.

திருக்குறள் அகவல்

[வித்துவான், திரு மா. வேதாசலம், எம்.ஏ, பி ஓ எல்.]

(சிலம்பு - உஅ. பரல் - கo, பக்கம் சஅo-ன் தொடர்ச்சி)

அ. அன்புடைமை

1. அன்பிற் குண்டோ அடைக்குந் தாழே
அல்லல் கண்டுழி ஆர்வலர்
புன்கண் நீரே பூசல் தருமே.

2. அன்பிலார் பிறருக்(கு) ஆகா மையின்
அனைத்தும் உரியர் அவர்க்கே
என்பும் உரியர் ஏனையோர் பிறர்க்கே.

3. அன்பொடு தொடர்ந்த ஆற்றின் பயனென
அறிவிப் பாரே ஆருயிர்க்(கு)
உடம்போ டியைந்த ஒருவாத் தொடர்பே.

4. ஆர்வம் உடைமை அன்பீன் குழவி
ஆர்வக் குழவி ஆவது
நண்பெனக் கூறும் நாடாச் சிறப்பே.

5. அன்பின் அமர்ந்த ஆறெனத் தெரிப்பர்
இல்லற வாழ்க்கை இன்பம்
துய்த்தோர் எய்தும் துறக்கச் சிறப்பே.

6. அறமென் பதற்கே அன்பு துணையென்
றறியா ஒருசிலர் அறைகுவர்
மறமென் பதற்கும் மதலை அஃதே.

7. என்பு சிறிதும் இல்லா உடம்பைக்
கதிரவன் காய்வது கடுப்ப
அன்பில் லதனை அறங்கா யும்மே.

8. அகத்தின் கண்ணே அன்பில் லாவுயிர்
இல்லறங் கூடி இருத்தல்
வன்பால் வறள்மரம் வளர்ந்தால் அற்றே.

9. எழில்மெய் கூடியும் இல்லற உறுப்பாம்
அன்பினர் அல்லா தாருக்(கு)
ஏனை உறுப்புகள் எவன்செய் யும்மே.

10. அன்பு முதலா அதன்வழி நின்ற
உடம்பே உயிர்சேர் உடம்பாம்
ஏனையோர்க் குடம்புகள் என்பு தோலே.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

இச்சங்கத்தார் சென்ற ஆண்டுகள்போல இவ்வாண்டும் மாசித் திங்களில் சென்னை மாநிலப்புலவர் கல்லூரி மாணவர்கட்குப் பரிசுத் தேர்வு நடத்தினார்கள்.

வித்துவான இறுதிநிலைக்கு 18. முதல் நிலைக்கு 27. புகுமுக வகுப்பிற்கு 24. ஆக 69 பேர் விண்ணப்பித்தவர்கள். இதில ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொருவர் எழுதவில்லை. எழுதிய 66 பேர்களில ஒருவரே தவறியவர். பெரும்பாலும் மாணவர்கள் தேர்ச்சி சிறப்பாகவே தெரிகின்றது.

வித்துவான் இறுதிநிலை

முதற் தகுதியில் தேர்ந்து பரிசு பெறுபவர்கள்

1. திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி மாணவி
   பதிவெண் · 80 ந. பாலம்மாள — முதற் பரிசு ரூ 50
2. திருப்பனந்தாள், K. V. S. S கல்லூரி மாணவர்
   பதிவெண்: 73. அ. பாலசுப்பிரமணியன — இரண்டாம் பரிசு ரூ. 40
3. தருமபுரம், கீழத்திசைப் பல்கலைக் கல்லூரி மாணவர்
   பதிவெண 66. சு. சேனாபதி — மூன்றாம் பரிசு ரூ. 30
4. கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்
   பதிவெண. 77. ம. நல்லசாமி — ”

இரண்டாந் தகுதியில் தேர்ந்தவர்கள்

5. பதிவெண்· 74. S. புண்ணியகோடி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
6. ” 67. பொ. ஆதிகேசவலு, ” ”
7. ” 76. மு. சேதுராமன், கரந்தைப் புலவர் கல்லூரி
8. ” 70. R. கிருஷ்ணமூர்த்தி, K. V. S. S கல்லூரி, திருப்பனந்தாள்
9. ” 68. கி. இராமசாமி, ” ”

மூன்றாந் தகுதியில் தேர்ந்தவர்கள்

10. பதிவெண்: 72. த. பழநிவேலு, ” ”
11. ” 69. V. R. கண்ணப்பா, ” ”
12. ” 71. S. D. கேசவன், ” ”
13. ” 81. ச. அரங்கம்மாள், திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி
14. ” 79. அ. நக்கீரன், ஓரத்திரான்குடிக்காடு, உரத்தநாடு
15. ” 65. மு. ஏகாம்பரம், கீழத்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்
16. ” 75. சீ. கோபாலன், கரந்தைப் புலவர் கல்லூரி
17. ” 82. க. வ. முத்தைய பிள்ளை, திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி

முதனிலை

முதற்றகுதியில் தேர்ந்து பரிசு பெறுபவர்கள்

1.	பதிவெண்	169	M. மணி,	K. V. S. S. கல்லூரி,	திருப்பனந்தாள்
2.	,,	161.	M. கலாநிதி,	,,	,,
3.	,,	166.	A. ராமசாமி,	,,	,,

முதற்றகுதியில் தேர்ந்தவர்கள்

4.	பதிவெண்:	167.	K. K. குழந்தைசாமி,	,,	,,
5.	,,	159.	V சீனிவாசகம்,	,,	,,
6.	,	168.	M. வேங்கடேசன்,	,,	,,
7.	,,	153	V. கலியமூர்த்தி,	,,	,,
8.	,,	165.	S. கோவிந்தன,	,,	,,
9.	,,	150.	V. கோபாலகிருஷ்ணன,		,,
10.	,,	162.	T K. நாராயணன,	,,	,,
11.	,,	154.	P. சத்தியமூர்த்தி,	,,	,,
12.	,,	156.	S இளையபெருமாள்,	,,	,,

இரண்டாந் தகுதியில் தேர்ந்தவர்கள்

13.	பதிவெண்	158	P. சுந்தரராஜன்,	,,	,,
14.	,,	163.	G சரசுவதி,	,,	,,
15.	,,	151.	T ராமலிங்கம,	,,	,,
16.	,,	171.	R. கலியமூர்த்தி,	,,	,,
17.	,,	155.	S. விசாலாட்சி,	,,	,,
18.	,,	170	T. N. சிவஷண்முகம்	,,	,,
19.	,,	164.	K. அருணாசலம்,	,,	,,
20.	,,	157.	M. ஆளவந்தார,	,,	,,
21.	,,	148.	ந. செகதீசன்,	கரந்தைப் புலவர் கல்லூரி	
22.	,,	148.	R. சங்கரநாராயணன்,	K. V. S. S கல்லூரி,	திருப்பனந்தாள
23.	,,	160.	S. சிவநேசன்,	,,	,,

மூன்றாந் தகுதியில் தேர்ந்தவர்கள்

24.	பதிவெண்:	149.	அ. கந்தசாமி,	கீழ்த்திசைப் புலவர் கல்லூரி,	தருமபுரம்.
25.	,,	173.	கி. குழைக்காதன்,	கொக்கிரகுளம்	
26.	,,	172.	பட்சிராஜன்,	பாளையங்கோட்டை	

புகுமுக வகுப்பு

முதற்றகுதியில் தேர்ந்து பரிசு பெறுபவாகள்

1. பதிவெண் 148. விசயராகவன், K. V. S. S. கல்லூரி, ரூ. 20
2. „ 145. S. காநதிமதி, „ ரூ. 15
3. „ 162. சாவித்திரி முத்தையா, திருவள்ளுவர் செந்தமிழப் புலவா கல்லூரி, திருநெல்வேலி

முதற்றகுதியில் தேர்ந்தவாகள்

4. பதிவெண்: 142. K. பரசுராமன், K. V. S. S கல்லூரி, திருப்பனந்தாள்
5. „ 146. S இராசகோபாலன், „ „
6. „ 151. M. மாணிககவாசகம், „ „
7. „ 163. க. சீதாராமன, திருவளளுவா செந்தமிழப் புலவா கல்லூரி, திருநெலவேலி
8. „ 143. M. பழனிவேலு, K. V S. S. கலலூரி, திருப்பனந்தாள்

இரண்டாந் தகுதியில் தோந்தவர்கள்

9. பதிவெண்: 144. K. M. கணணப்பன், „ „
10. „ 164. திருவேஙகடநாதன், திருவள்ளுவர் செந்தமிழப் புலவா கல்லூரி, திருநெல்வேலி
11. „ 141. K. பட்டாபிராமன், K. V. S. S. கலலூரி, திருபபனந்தாள்
12. „ 149. S R ராமமூாததி, „ „
13. „ 153. D. அருணைசலம, „ „
14. „ 150. R. நேத்திரானந்தம், „ „
15. „ 152. K செலலமுதது „ „
16. „ 161. குருமூர்த்தி, கீழதிசைப் பலகலைக் கல்லூரி, தருமபுரம்
17. „ 154. S. அருணைசலம், K. V. S. S கல்லூரி, திருப்பனநதாள்
18. „ 156 வே. எட்வர்ட் கனகராசன், கரநதைப் புலவர் கல்லூரி

மூன்றாந் தகுதியில் தோந்தவர்கள்

19. பதிவெண்: 157. வேஙகடசுப்பிரமணியன், கரந்தைப் புலவர் கல்லூரி
20. „ 155. S. செயராமன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
21. „ 158. சா. இராமச்சந்திரன், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்
22. „ 160. சி. வ. கடாட்சம் „ „

நெல்லை,
5-6-1954.

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) மாதர் மணிவாசக சங்கம், விருதுநகர்

விருதுநகர் மணிவாசக சஙகத்தின முதலாவது ஆண்டு நிறைவு விழா 23-5-54-இல் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில அமைநதத அழகிய கொட்டகையில் நிகழவுற்றது. அதற்கு சென்னை எதிராஜ் மகளிர் கல்லூரித தலைமை ஆசிரியை திருவாட்டி ஏ. ஆர். இநதிரா பி.ஏ, (ஹானர்ஸ்) தலைமை தாஙகினர். அறிவறிந்த பல பெணமணிகள் பல அரிய சொற்பொழிவு நிகழத்தினர். இரவு 12-மணிககு நன்றி கூறலுடன் விழா இனிது நிறைவேறியது.

குறிப்பு: உலகின் ஒரு கூறு பெணணினம. நாட்டின் எழுசசிக்குப் பெண்ணினமும் ஆணினத்தோடொத்த அறிவும், திறனும், ஆற்றலும் உடையதாதல் வேணடும். இப் பண்புகள் பணடைக்காலப் பெண்மணி கள்பால் வீறுகொண்டிருந்தன. இற்றை நாளினும் மாதர் மணிவாசக சஙகம் போன்ற அருஙகலைச சங்கங்கள் தோனறி அறிவுத்துறையில முன்னேறிவருவது அறிநது கழிபேருவகை கொளகினறோம்.

(உ) சிலப்பதிகார விழா, இலங்கைப் புங்குடு தீவில் கொண்டாட்டம

யாழ்ப்பாணததை அடுத்துள்ள புஙகுடு தீவில் கண்ணகியம்மன் கோயில முன்றிலில் (23, 24, 25-4-54)-ஆம நாட்களில சிலப்பதிகார விழா சிறப்புற நிகழ்ந்தது. அதற்குப் பணடிதர் திரு. கா. பொ இரத் தினம் அவர்கள் தலைமை ஏற்றனர். தமிழகத்திலிருந்து பேரறிவு சான்ற அறிஞர்களும் உள்நாட்டு அறிஞர் பெருமக்களும் சென்று சிலப் பதிகார அரிய கருததுக்களைக் கேட்டார் இன்புறும வணணம் சொற் பெருககாற்றினா. பல்லாயிரககணக்கான மக்கள் கலந்துகொணடு அறிவு விருந்துண்டு அகமுகம் மகிழ்ந்தனா.

குறிப்பு கண்ணகியார் கற்புக்கடம் பூண்ட பொற்புடையார். அவர்தம் கற்பின் திறததை முற்ற முடிய விளக்கும் வரலாற்று நூலே சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற்காப்பியம். இதன் நயமும, இதன் கண் பொதிந்து கிடக்கும் அறம், மறம், கல்வி, கேள்வி, கொடை, செஙகோல் மனனா திறம் யாவும் தமிழாதம் பண்பாட்டை உயர்த்துக் கூறுவதாகும. இதன அரிய சீரிய கருததைக கடல்கடநத வேற்று நாட்டிலும் உணர இத்தகைய விழா நிகழ்வது போற்றற்குரிய செய லாகும்.

(ங) திருச்சி மாவட்டத்தில் தமிழில் அரசியல் அலுவல்கள்

நம்நாடு விடுதலை பெற்று எட்டாண்டுகட்கு மேலாகின்றன. ஆயினும் அவ்வந்நாட்டு மொழிகள் ஆட்சி மொழியாக இன்னும ஆக

வில்லை. திருச்சி மாவட்டத்தில் மட்டும் எடுத்துக்காட்டுக்காகத் தமிழ் மொழியில் அரசியல் அலுவலை நிகழ்த்திவர சென்னை மாநில அரசினர் ஏற்பாடு செய்துள்ளனர். ஆனால், அரசினர் அதனை உண்மையின் பற்றுதலுடன் செய்யாது வேண்டா வெறுப்பாகவே அமைத்துள்ளனர். அங்கு ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் வரை தமிழில் அலுவல்கள் நடந்தேறச் செய்தும் தமிழில் அதற்கேற்ற சொற்கள் இல்லையென்றும், அதனால் ஆங்கிலத்திற் கலந்தே அரசியல் முறைகளை நிகழ்த்தவேண்டியதிருக்கிறதென்றும் சிலர் குறைகூறியும், கையாண்டு செய்தும் எழுதிவருகின்றனர். எந்த மொழியும் உடனே தானாக எல்லாச் சொற்களும் கொண்டு அமைந்துவிடாது. அவ்வம்மொழி மக்கள் மடிதற்று முன்னின்று வளர்த்தாலன்றி வளராது. புதிதாக வந்த அமைச்சர் இராமசாமிப் படையாச்சியவர்கள் தமிழ்மொழி ஆட்சிமொழி ஆதற்கேற்ற காலம் இப்போதில்லையென்கிறார். அமைச்சராவார் தத்தம் மொழியில் புலமையும், பற்றும் உடையராதல் வேண்டும். அப்போதுதான் நாட்டு மொழி வளரும், நாடு நாடாகப் பெருமையுறும். இன்றேல் வேற்று மொழிகட்கு அடிமையாகி உழலவேண்டியதுதான். இந்தி மொழியை வளர்க்க எத்தனை வகைகளில் அடிகோலுகின்றனர்? அம்முறையை நந்தமிழ் மொழியிடத்துக் கொணரலாகாதா? உலக வழக்கில் மறைந்த வடமொழியை ஆட்சி மொழியாக்க ஒரு சிலர் கனவு காண்கின்றனர். அவ்வுலகைக் கண்டும் கேட்டும் இருக்கின்ற அமைச்சர் காலத்தைக் காட்டிச் சொல்வது சாலுமா!

திருச்சியில் நிகழ்ந்துவரும் அரசியல் மொழியாகிய தமிழ்மொழியை நம் தமிழகமெங்கணும் கொணரப் பொதுமக்கள் உடனே வீறுகொண்டெழுதல் வேண்டும். தமிழில் எதையும் கொணர ஒல்லும் என்பதைக் காட்டுதல் வேண்டும். அப்போதுதான் பிற்போக்காளர் திருந்தி முற்போக்குறுவர். நமது என்றுமுள தென்றமிழ் ஏற்றமுடன் எழுச்சியுறுமெனக் கூறுகின்றோம். மொழி யெழுச்சிபெறின் நாட்டு நலங்களும் எழுச்சியுறும், அதனால் உலகமக்களோடொத்த உயர்நாடாக நம் தமிழகம் மிளிரும். மொழி, கலை, பண்பாடு முதலியவைகளில் தலைசிறந்து நின்ற நம் தமிழகம் இற்றைநிலையில் எவ்வாறிருக்கின்றதென்பதை எண்ணுதல் வேண்டாவா? எண்ணி அதற்காவன செய்ய வேண்டாவா? அண்மையில் நம் நாட்டை விட்டுப் பிரிந்த ஆந்திரநாடு, தன் மொழியில் ஆட்சி செலுத்த வீறுகொண்டு நிற்கின்றது. நாம் மட்டும் காலமில்லை, வாய்ப்பில்லை என்று காலத்தைக் கடத்துகின்றோம். விழுமின்! எழுமின்!

மதிப்புரை

'மாலைப் பாக்கள்' பக்கங்கள்: அஅ. விலை. ரூ. க

[ஆசிரியர்: புலவர் திரு. யம். பி. மாஸ்கரேனஸ் அவர்கள், தூத்துக்குடி]

இந்நூல் அழகிய செந்தமிழ்ப் பாக்களால் இயன்றது. இதன்கண் 'அஞ்சலி' என்பது முதல் 'பாதமலர்' என்பது இறுதியாக ௬௩ தலைப்புகளில் அமைத்து இந்நூலை வெளியிட்டுள்ளார். இதில் அடங்கியுள்ள பாக்கள் செந்தமிழினபஞ் செறிந்து விழுமிய ஓசை நயமும் சொன்னலமும் பொருளாழமும் மிக்கனவாய் கற்பார்க்குக் கழிபேரின்பம் ஊட்டுவன. இதிற் பெரும்பகுதி ஆசிரியர் சமயமாகிய கிறித்துவ நெறியில் உறைத்து நின்ற பெரியார்களின் வாழ்த்தாக இருப்பினும் அவைகளில் அமைந்திருக்கும் கருத்துக்கள் சாதிசமய வேறுபாடின்றி யாவரும் கற்றற் கேற்றன; கேட்டற்கினியன. விழுமிய செம்பாக நடை; பாக்கள் கடல்மடை திறந்தென யாற்றொழுக்குப்போல தட்டுத் தடையின்றிச் செப்பமாக அமைந்துள்ளன. இஃது ஆசிரியரின் உள்ளம் நிரம்பிய புலமை நிறைவும் அன்பின் முதிர்வும் பாவாக ஊற்றெடுத்து உருவாகியதெனக் கூறலாம். ஆசிரியர் இதுபோன்ற பாக்களை யாக்கும் பணியில் ஈடுபாடுற்று நம் தமிழன்னையின் திருவடிகட்கு வாடாத மாலையாக இதுபோன்ற நன்னூல் பலயாத்துப் பன்னெடுநாட்கள் வாழுமாறு இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் பாட்டில் ஒன்று காட்டுவாம், இறைவன் முழுமுதல் தன்மையை விளக்கியிருக்கும் ஒட்பத்தைக் காண்மின் :

பெண்ணுடன் ஆணுமில்லான்
    பெயர்குலம் இடமும் இல்லான்
எண்ணுடன் அளவும் இல்லான்
    இணைமுதல் எதிரும் இல்லான்
கண்ணுடன் ஒளியாய் நிற்கும்
    களங்கமில் பளிங்கின் மிக்கான்
மண்ணுடன் விண்ணும் வாழ்த்தும்
    மலரடி சிரமேல் வைப்பாம்.

காதல் நிலைக் கவிதைகள், பக்கங்கள்: ௬௨. அணா. ௧0.

[ஆசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்கள், தியாகராசர் கல்லூரி, மதுரை]

காதல் என்பது பருவம் பூத்த ஆண், பெண் இரு பாலாரிடத்தும் மலர்ந்து மணந்தரும் செவ்விய போது. இது கட்டற்ற ஒன்று. இக் காதலொன்றினாலேயே இன்றைய உலகம் இன்ப உலகமாக நிலைத்துளது.

இக் காதற்கனிவை ஆசிரியரவர்கள் '**காதல்**' என்பது முதல், '**எனக்கவள் கண்ணகி தேவியே**' என்பதிறுதியாக எண்வகைத் தலைப்புக்களில் அழகிய சீரிய கூரிய செஞ்சொற்கள் கொண்டு நல்ல பாக்களாக அமைத்து வெளியிட்டுள்ளனர்.

இதன்கண் உண்மைக் காதல் இன்னதெனவும் அன்மைக் காதல் இன்னதெனவும் ஆசிரியர் தம் அஃகியகன்ற அறிவின் மதுகையானும் நுண்மாணுழை புலத்தானும் யாரும் எளிமையிற் படித்துணருமாறு பாடியுதவியது புகழ்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் உரியது. இதுபோன்ற

நல்ல அரிய நூல்கள் இக் காலத்துக்கு வரவேற்கத் தக்கன. உயர் காதலைக் குறித்த ஆசிரியர் கருத்தொன்றைக் காட்டாகக் காட்டுவாம்:

'பலநாள் கண்டு பழகுவதால் பலவாம் குறைகள் அறிவதனால்
நலமாய் இருந்த ஒருவரிடம் நாடி வெறுப்பு வருவதுண்டு
பலநாள் பழகிக் குறையுணர்ந்தும் பாரில் இருவர் இணைவதென்றால்
உலகில் அதுவே உயர்காதல் உடையார் இருக்கும் அக்காதல்'

என்பதில் என்ன அழகிய கருத்து! இதுபோன்ற துறையில் ஆசிரியரவர்கள் ஈடுபட்டு தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அரிய நூல்கள் யாத்துதவுமாறு வேண்டுகின்றோம்.

திருவாசகம் - ஆராய்ச்சிப் பேருரை. விலை. ரூ. 15.

[உரையாசிரியர்: யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மாவைக்கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் என்னும் பண்டிதமணி திரு. க. சு. நவநீத கிருட்டிண பாரதியார் அவர்கள்.]

இவ்வுரை, நூலடைவு பொருளடைவுகளுடன் திருப்பாட்டுக்களின் கருத்துரை, பொழிப்புரை, விளக்கவுரைகளும், ஆங்காங்கு இன்றியமையாது வேண்டப்படும் வரலாறுகளும், சிறந்த இலக்கணக் குறிப்புக்களும் கொண்டு திகழ்கின்றது. உரையாசிரியர் செந்தமிழ்ப் புலமையும் வடமொழி வன்மையும் ஒருங்குபடைத்த நன்மையர். பல நூல் ஆசிரியர். சங்ககாலப் புலவர்போன்று பாவன்மையும் உரைவன்மையும் நாவன்மையும் ஒருசேரப் பெற்ற பெரும்புலவர். தொடர்ந்த தமிழ்ப்பேராசிரியர். சமய நூல் வல்லுநர். இவ்வரும்பெரும் நூலுக்கு இத்தகையார் உரை எழுதி உதவியது தனிப்பெரும் பேறேயாம். மேலும் திருவாசகச் செழும் பனுவலைப் புகழ்நூற் கண்கொண்டு பெரும்பாலும் உரைவகுத்து ஐந்திணை அகநூற் கருத்தும் ஆங்காங்குச் சுட்டிக்காட்டினர் ஏனைஉரையாசிரியர். இவ்வுரையாசிரியர் பாட்டுதோறும், சொற்றோறும் அகப்பொருள் நுணுக்கம் காட்டிச் செல்லும் தன்மை அனைவர்களாலும் போற்றத் தக்கதே. இவ்வுரையினைக் கற்பார் தொல்காப்பிய முதலிய சங்கநூல் அனைத்திலுமுள்ள நுண்பொருள்களெல்லாம் நுண்ணிதின் உணர்ந்த திண்ணியராவர். சித்தாந்த நுணுக்கங்கள் வேண்டுமிடங்களிலெல்லாம் விளக்கியுள்ளார்கள். இதற்கு மேற்கோளாகத் தென்மொழி வடமொழி நூல்கள் எழுபதுக்கு மேற்பட்டன கையாண்டுள்ளார்கள். இதனானே உரையின் திட்பமும் ஆசிரியர் ஒட்பமும் நன்கு புலனாகும். இவ்வுரை நூலைச் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் பொதுவாகச் செந்தமிழ் மக்களும் வாங்கிக் கற்றுப் பெரும்பயன் எய்துவார்களாக. இதனை வாங்கும் வாயிலாக இவ்வுரையாசிரியர் ஏனைத் திருமுறைகளுக்கும் இதுபோன்ற செவ்விய உரை எழுத முன்வருமாறு தூண்டுதல் பெருங்கடன். நடை, ஆற்றொழுக்கும் இனிமையும் எளிமையும் பொருந்தியது. அச்சு, தாள், கட்டடம் முதலியன சிறந்தன.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பா அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.